## அல்லாஹ்வின் கட்டளை

وَلَقَدِ اسْتُهْزِئَ بِرُسُلٍ مِّنْ قَبْلِكَ فَحَاقَ بِالَّذِيْنَ سَخِرُوْا مِنْهُمْ مَّا كَانُوْا بِهٖ يَسْتَهْزِءُوْنَ

உமக்கு முன்னர் தோன்றிய தூதர்களும் ஏளனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் எதனை (அதாவது எந்த ஆக்கினை) குறித்து ஏளனம் செய்தனரோ அந்த ஆக்கினையே அவர்களுள் ஏளனம் செய்தவர்களைச் சூழ்ந்து கொண்டது. (6:11)


بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 1-2

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

2-9 ஜமாதிஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 6-13 சுல்ஹ் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக்
6-13 ஜனவரி 2022


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**அந்த சித்தீக்கின் மீது ஆச்சரியம் ஏற்படுகின்றது. அவர் அல்லாஹ்வின் சட்டங்களை மீறுவதை ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக அதனை பேணும் பொருட்டு எல்லா வகையான துன்பத்தையும் ஆபத்துகளையும் எதிர்கொள்வதற்கு தயாராகினார்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

கடந்த காலங்களில் இதற்கு நிகரான உதாரணத்தைப் பார்த்தால் அது யூசுஃப் (அலை) அவர்களின் உண்மையாக உள்ளது. எப்படிப்பட்ட உண்மையை அன்னார் வெளிப்படுத்தினார்கள் என்றால் அவர் யூசுஃப் சித்தீக் என்று அழைக்கப்பட்டார். ஓர் அழகிய, கண்ணியத்திற்குரிய, பெரும் பெரும் வாதம் செய்யும் இளம் பெண் முற்றிலும் தனிமையிலும் எவரும் இல்லாத நிலையிலும் தீய செயலை (விபச்சாரம்) செய்வதற்கு விரும்பினாள். ஆனால் அந்த சித்தீக்கின் மீது ஆச்சரியம் ஏற்படுகின்றது. அவர் அல்லாஹ்வின் சட்டங்களை மீறுவதை விரும்பவில்லை. மேலும் அதற்காக எல்லா வகையான ஆபத்துகளையும் துன்பங்களையும் எதிர்கொள்ள அவர் தயாராகினார். எந்த அளவுக்கொன்றால் வாழ்க்கையை சிறைச்சாலையில் கழிப்பதை ஏற்றுக் கொண்டு விட்டார். எனவே அவர், رَبِّ السِّجْنُ اَحَبُّ اِلَيَّ مِمَّا يَدْعُوْنَنِيْ اِلَيْهِ என்று கூறினார். அதாவது யூசுஃப் (அலை) அவர்கள் இவ்வாறு துஆ செய்தார்கள். அதாவது இறைவா! இந்தப் பெண் எதன் பக்கம் என்னை அழைக்கின்றாரோ அதை விட சிறை எனக்கு விருப்பத்திற்குரியதாகும். இதிலிருந்து ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களின் தூய இயல்பும், நபித்துவத்தின் தன்மானமும் தெரிய வருகின்றது. அன்னார் வேறெந்த விஷயத்தையும் குறிப்பிடக் கூட விரும்பவில்லை. அதன் பெயரைக் கூட எடுக்கவில்லை. இதன் பொருள் என்ன? யூசுஃப் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அழகிலும், கருணையிலும் தம்மை மாய்த்துக் கொண்டவராகவும், அல்லாஹ்வின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னாரது பார்வையில் தனது நேசத்திற்குரிய இறைவனைத் தவிர்த்து மற்ற எல்லா விஷயமும் பொருளற்றதாக இருந்தது. அல்லாஹ்வின் எல்லைகளை முறிப்பதை அன்னார் ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 344 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## எல்லா மனிதர்களுக்கும் அல்லாஹ்வின் மீதான நேசத்தின் உணர்வு உள்ளது

يُنْۢبِتُ لَكُمْ بِهِ الزَّرْعَ وَالزَّيْتُوْنَ وَالنَّخِيْلَ وَالْاَعْنَابَ وَمِنْ كُلِّ الثَّمَرٰتِ ؕ اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ (16:12)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: மனிதனின் முதன்மையான உணவாக அசைவ உணவு இருக்கக் கூடாது என்று சிலர் ஆட்சேபனை செய்யலாம். ஏனென்றால் குறிப்பிட்ட ஒரு பிரிவினர் உலகில் சைவ உணவை மட்டுமே பயன்படுத்துகின்றனர். ஆனால் இந்த ஆட்சேபனை என்பது சிந்தித்து பார்க்காததன் விளைவே ஆகும். ஏனென்றால் அசைவ உணவை பயன்படுத்தாத நபர்கள் இவ்வாறு வாதம் செய்கின்றார்கள். அந்த மக்கள் நிச்சயமாக இறைச்சி சாப்பிடாமல் இருக்கலாம். ஆனால் அவர்களின் முக்கிய உணவும் கூட அசைவமாகவே இருக்கின்றது. தாய்ப்பாலே குடிக்காமல் எத்தனை பிள்ளைகள் வளர்கின்றனர். அவ்வாறிருக்க தாய்ப்பாலில் புலால் உணவு இல்லையா? எந்தப் பிள்ளைகள் தாய்ப்பால் குடிப்பதில்லையோ அவர்கள் கால்நடைகளின் பாலை குடிக்கின்றனர். அதுவும் புலால் உணவு தான். எந்த மக்கள் புலால் உணவை உண்பதற்கு மறுக்கின்றார்களோ அவர்கள் பெரிய வயதிலும் கூட நெய், பால் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். அவை புலால் உணவுகளே ஆகும். எனவே புலால் உணவை முக்கிய உணவாக கொள்ளாத எந்த மனிதரும் இல்லை. எந்த நபர்கள் நாங்கள் புலால் உணவை உண்பதில்லை என்று வாதம் செய்கின்றார்களோ ஒன்று அவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்கின்றனர். அல்லது தெரிந்து கொண்டே மற்றவர்களை ஏமாற்றுகின்றனர். நாங்கள் இறைச்சி உண்பதில்லை என்று அவர்களால் கூறிக் கொள்ள முடியும். ஆனால் நாங்கள் புலால் உணவை பயன்படுத்துவதே இல்லை என்று அவர்களால் கூற முடியாது. اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيَةً لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ என்பதில் உணவுகளை குறிப்பிட்டு விட்டு (வசனத்தின்) இறுதியில் இதில் சிந்தக்கக் கூடியவர்களுக்கு அடையாளம் உள்ளது என்று அல்லாஹ் கூறுகின்றான். மனித மூளை உணவால் வளர்ச்சி அடைகின்றது என்பதன் பக்கம் இதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 133 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**வாகனத்தில் அமர்ந்து கொண்டு நோயாளி (காபாவை) வலம் வருதல்**

**1632:** ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் ஒட்டகத்தின் மீது அமர்ந்து பைத்துல்லாஹ்வை (கஅபாவை) வலம் வந்தார்கள். ஹஜருல் அஸ்வதின் பக்கம் வரும்போதெல்லாம் தம் கையிலிருந்த ஒன்றைக் கொண்டு ஹஜருல் அஸ்வதை நோக்கிச் சைகை செய்வார்கள். மேலும் அல்லாஹு அக்பர் என்று (தக்பீர்) கூறுவார்கள்.

**1633:** ஹஸ்ரத் உம்மு ஸல்மா (ரலி) அறிவிக்கின்றார்கள்: நான் நோயுற்றுள்ளேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முறையிட்டேன். அதற்கவர்கள், நீங்கள் மக்களுக்குப் பின்னால் வாகனத்தில் அமர்ந்து வலம் வாருங்கள் என்று கூறினார்கள். எனவே நான் (அது போன்றே) வலம் வந்தேன். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பைத்துல்லாஹ்வின் ஒரு பக்கம் தொழுது கொண்டிருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் وَالطُّوْرِ وَكِتٰبٍ مَّسْطُوْرٍ எனும் அத்தியாத்தை (தொழுகையில் ஓதிக் கொண்டிருந்தார்கள்.

(சஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் அல்ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர்*

*(திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை*

*19 & 26 நவம்பர் 2021 (முழுவதுமாக)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 நவம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **19 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

சஹாபிகளின் (இஸ்லாத்திறற்கு) முந்தைய நிலைகளைப் பற்றியும், இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அவர்களின் நிலைகளில் ஏற்பட்ட புரட்சியைப் பற்றியும் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஓர் உதாரணத்தை வழங்கியுள்ளார்கள். இந்த உதாரணம் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இங்கும் இந்த அடிப்படையில் நான் அதை கூறி விடுகின்றேன்.

அதாவது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபித்தோழர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளாக எவ்வாறு ஆனார்கள்? எவ்வாறு அவர்கள் பெரும் பெரும் அந்தஸ்துகளை பெற்றார்கள்? என்று பாருங்கள். அவர்கள் முயற்சி செய்தனர். ஏனென்றால் அவர்கள் ஒரு நேரத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயிரைப் பறிக்க விரும்பிய எதிரிகளாக இருந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களை ஏசிப்பேசி வந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இரண்டாவது கலீஃபாவாக ஆனார்கள். ஆரம்ப காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக வீட்டை விட்டு வெறியேறிய மிகக் கடுமையான எதிரியாக அன்னார் (ரலி) இருந்தார்கள். வழியில் ஒரு நபர் சந்தித்தார். எங்கே செல்கின்றீர்கள்? என்று அவர் கேட்டார். அதற்கு முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்வதற்காக செல்கின்றேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். முதலில் முஸ்லிம் ஆகி விட்ட உங்களது சகோதரியையும் மைத்துனரையும் கொலை செய்யுங்கள். பின்னர் முஹம்மது (ஸல்) அவர்களை கொலை செய்யுங்கள் என்று அவர் கூறினார்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் கோபமுற்றார்கள். மேலும் தனது சகோதரியின் வீட்டை நோக்கி புறப்பட்டார்கள். முன்னால் சென்று பார்த்தபோது வீட்டு வாசல் அடைக்கப்பட்டிருந்தது. ஒரு நபர் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார். அதனை அன்னாரின் சகோதரியும், மைத்துனரும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நேரம் வரை பர்தாவிற்கான கட்டளை இறங்கி இருக்கவில்லை. எனவே அந்த சஹாபி வீட்டினுள் அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டின் கதவை தட்டி கதவை திறங்கள் என்று கூறினார்கள். அன்னாரின் குரலைக் கேட்டதும் அன்னார் (ரலி) அவரை கொன்று விடுவார்கள் என்ற அச்சம் வீட்டினுள் இருந்தவர்களுக்கு ஏற்பட்டது. எனவே அவர்கள் கதவை திறக்கவில்லை. நீங்கள் கதவை திறக்கவில்லையென்றால் நான் அதனை உடைத்து விடுவேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அப்போது திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்த அந்த முஸ்லிமை அவர்கள் மறைத்து விட்டார்கள். மைத்துனரும் ஒளிந்து கொண்டார். சகோதரி மட்டுமே முன்னால் சென்று கதவை திறந்தார். கதவை திறக்க ஏன் தாமதமானது? என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ஏதோ ஓதிக் கொண்டிருந்த அந்த நபர் யார்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அவர்கள் அஞ்சி விஷயத்தை மறைக்க விரும்பினார்கள். நீங்கள் என்ன ஓதிக் கொண்டிருந்தீர்களோ அதை எனக்கு கூறுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். தாங்கள் அதற்கு அவமரியாதை செய்து விடுவீர்கள். எனவே எங்களை நீங்கள் கொன்றாலும் சரி! நாங்கள் அதனை உங்களுக்கு கூற மாட்டோம் என்று அன்னாரின் சகோதரி கூறினார். நான் அவமரியாதை செய்ய மாட்டேன் என்று வாக்குறுதி அளிப்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது நான் திருக்குர்ஆனை அவமதிக்க மாட்டேன் என்று கூறினார்கள். அப்போது திருக்குர்ஆனை அவர் ஓதிக் காட்டினார். அதைக் கேட்டு விட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஓடோடி சென்றார்கள். வாள் கையிலேயே தான் இருந்தது. அதைப் பார்த்து விட்டு, உமரே! இந்த விஷயம் எதுவரை இருக்கும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதைக்கேட்டு அன்னார் (ரலி) அழுது விட்டார்கள். மேலும் நான் உங்களை கொலை செய்வதற்காகவே புறப்பட்டேன். ஆனால் நான் சுயமே இரையாகி விட்டேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஆக அந்த நீண்ட நெடிய சம்பவத்தின் சுருக்கம் இதுவாகும். இதனை நான் முன்னரும் எடுத்துரைத்து விட்டேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: முதலில் இந்த நிலை இருந்தது. அதிலிருந்து அவர்கள் முன்னேற்றம் அடைந்தனர். முன்னர் மது அருந்திக் கொண்டும், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்தும் இந்த சஹாபிகள் இருந்தனர். மேலும் பல சஹாபிகளைப் பற்றிய குறிப்பு உள்ளது. பல வகையான பலவீனங்கள் அவர்களிடம் காணப்பட்டன. ஆனால் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டபோது மார்க்கத்திற்காக தைரியத்துடனும், முயற்சியுடனும் செயல்பட்டார்கள். எனவே அதன் விளைவாக அவர்கள் மட்டும் சுயமே உயர்தரமான அந்தஸ்தை அடைந்து விடவில்லை. மாறாக, மற்றவர்களையும் உயர்தரமான அந்தஸ்தை அடையச் செய்வதற்கு காரணியாக அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்கள் பிறக்கும்போதே சஹாபிகளாக இருக்கவில்லை. மாறாக, மற்றவர்கள் எப்படி இருந்தார்களோ அதுபோன்றே அவர்களும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் அமல் செய்தார்கள். தைரியத்தை காட்டினார்கள். அதனால் சஹாபியாக ஆகி விட்டார்கள். இன்றும் நாம் அவ்வாறு செய்தால் நம்மால் சஹாபியாக முடியும்.

(அவ்ரதோன் கா தீன்ஸே வாகிஃப் ஹோனா ஜரூரி ஹே, அன்வாருல் உலூம் தொகுதி 4 பக்கம் 38,38)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இறையச்சத்தின் நிலை என்னவாக இருந்தது? இது தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஃபராத் நதிக்கரையில் ஓர் ஆடு வீணாகி மடிந்து விட்டால் கூட கியாமத் நாளன்று அது தொடர்பாக அல்லாஹ் என்னிடம் கேள்வி கேட்பான் என நான் அஞ்சுகின்றேன்.

(இப்னு ஜௌஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 140)

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஃபாரத் நதிக்கரையில் ஓர் ஒட்டகம் வீணாகி இறந்து விட்டால் கூட அது தொடர்பாக அல்லாஹ் என்னிடம் கேள்வி கேட்பான் என்று நான் அஞ்சுகின்றேன்.

(அத்தப்கத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 232 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு நாள் நான் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடன் வெளியில் சென்றேன். எந்த அளவுக்கென்றால் அன்னார் (ரலி) அவர்கள் ஒரு தோட்டத்தில் நுழைந்து விட்டார்கள். எனக்கும், அன்னார் (ரலி) அவர்களுக்கும் மத்தியில் ஒரு சுவர் இருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் தோட்டத்தினுள் இருந்தார்கள். நான் அன்னார் (ரலி) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். கத்தாபின் மகன் உமரே! நீர் அமீருல் மூமினீன் ஆவீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர்

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

நிச்சயம் அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டும். இல்லையென்றால் அவன் கண்டிப்பாக உமக்கு தண்டனை வழங்குவான்.

(மோதா இமாம் மாலிக் கிதாபுல் கலாம்... பக்கம் 601 அறிவிப்பு எண் 1867 – பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

كَفٰى بِالْمَوْتِ وَاعِظًا يَا عُمَرُ என்ற வாக்கியம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மோதிரத்தில் பதியப்பட்டிருந்தது. உமரே! அறிவுரையை விட மரணம் போதுமானதாகும்.

(அல்இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 3 பக்கம் 236 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது மனிதன் மரணத்தை நினைவில் வைத்தால் அதுவே அறிவுரை வழங்கும் ஒரு விஷயமாக உள்ளது. மேலும் தனது நிலைகளை சரி செய்து கொள்வதற்கு அதுவே போதுமானதாகும்.

அப்துல்லாஹ் பின் ஷத்தாத் கூறி வந்தார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தேம்பி தேம்பி அழுக் கேட்டேன். நான் கடைசி வரிசையில் இருந்தேன். அந்நிலையில் إِنَّمَآ أَشْكُوا بَثِّي وَحُزْنِيٓ إِلَى اللهِ என்ற வசனத்தை அன்னார் (ரலி) ஓதிக் கொண்டிருந்தார்கள். பொருள்: நான் எனது வேதனையையும், துன்பத்தையும் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் மட்டுமே முறையிடுகின்றேன்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் அஸான் பாப் اِذَا بَكَى الْاِمَامُ فِى الصَّلٰوةِ)

ஓர் அறிவிப்பை ஒரு குத்பாவில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் எடுத்துரைத்திருந்தார்கள். அதன் சிறிய விளக்கத்தை தமது சொற்களிலும் அன்னார் (ரஹ்) இவ்வாறு எடுத்துரைத்திருந்தார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஷத்தாத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுகை நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது நான் கடைசி வரிசையில் இருந்தேன். இருந்தபோதிலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழு குரலின் சப்தத்தை நான் கேட்டுக் கொண்டிருந்தேன்.

إِنَّمَآ أَشْكُوا بَثِّي وَحُزْنِيٓ إِلَى اللهِ என்ற வசனத்தை அன்னார் (ரலி) ஓதிக் கொண்டிருந்தார்கள். நான் எனது இறைவனுக்கு முன்னால் மட்டுமே எனது அனைத்து துன்பங்களையும் எடுத்துரைத்து முறையீடு செய்வேன். அவனைத் தவிர்த்து வேறு எவரது முன்னிலையிலும் எடுத்துரைக்க எனக்கு அவசியமில்லை என்று கூறினார்கள். ஆக இறைவனை நினைவு கூறுவதில் அன்னார் மூழ்கி இருந்தார்கள். அன்னார் இறைவனைத் தவிர்த்து வேறு எந்தவொரு சபையையும் விரும்பவே இல்லை. தனது துன்பத்தையும், வேதனையையும் எடுத்துரைத்து அழுது மன்றாடி தனது நெஞ்சத்திலுள்ள சுமைகளை எளிதாக்கிக் கொள்வதற்கு வேறு எந்த சபையையும் அவர்கள் விரும்பியதில்லை. அறிவிப்பு செய்பவர் கூறுகின்றார்: நான் கடைசி வரிசையில் இருந்தேன். அங்கு வரை எனக்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நெஞ்சத்தின் அழு குரலின் சப்தம் வந்து கொண்டிருந்தது.

(குத்பாத்தே தாஹிர் தொகுதி 13 பக்கம் 248, 249)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொண்டு செய்யக்கூடிய மற்றும் தியாகம் செய்யக்கூடிய பழைய நபர்களை எவ்வாறு கருத்தில் கொண்டிருந்தார்கள். இது தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. சஃலபா பின் அபூ மாலிக் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மதீனா வாசிகளின் பெண்களில் சிலருக்கு போர்வையை வழங்கினார்கள். சில நல்ல வகையான போர்வைகளும் வந்திருந்தன. அவற்றில் ஒரு சிறந்த போர்வை எஞ்சி இருந்தது. அன்னாருக்கு அருகில் இருந்த மக்களில் ஒருவர் அன்னாரிடம் இவ்வாறு கூறினார்: அமீருல் மூமினீன் அவர்களே! உங்களுக்கு அருகில் உள்ள ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த மகளுக்கு இதனை கொடுத்து விடுங்கள். அதாவது அவர் கூறியதன் கருத்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் மகளாகிய ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் அவர்களாக இருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உம்மே சலீத் இதற்கு அதிக தகுதி படைத்தவர் ஆவார்கள் என்று கூறினார்கள். இல்லை! உம்மே சலீத் அவர்கள் தான் இதற்கு அதிக தகுதி படைத்தவராக இருக்கின்றார் என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உம்மே சலீத் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்திருந்த அன்ஸாரி பெண்களைச் சார்ந்தவராக இருக்கின்றார்கள். உஹது போர் நாளில் நமக்காக அவர் தண்ணீர் குடங்களை சுமந்து வந்தார்கள் என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4071)

அடுத்து தியாகம் செய்யக்கூடிய நெருங்கிய மக்களுக்கு அன்பளிப்பு வழங்கக்கூடிய குறிப்பும் ஓர் அறிவிப்பில் கிடைக்கின்றது. ஸைது பின் அஸ்லம் அவர்கள் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடன் கடை வீதிக்கு சென்றிருந்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஓர் இளம் பெண் பின் பக்கமாக வந்து சந்தித்தார். அமீருல் மூமினீன் அவர்களே! எனது கணவர் மரணித்து விட்டார். சிறு சிறு பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஆட்டின் கயிறு கூட அவருக்கு கிடைக்கவில்லை. அவருக்கு எந்த விளைநிலமும் இல்லை. மேலும் பால் கொடுக்கும் விலங்குகளும், கால்நடைகளும் இல்லை. இவர்களை வறட்சி தின்று விடுமோ என்று நான் அஞ்சுகின்றேன். நான் குஃப்ஃபாப் பின் ஈமா கிஃபாரியின் மகள் ஆவேன். எனது தந்தை ஹுதைபியாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள் என்று அந்த இளம் பெண் கூறினார்.

இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். தொடர்ந்து முன்னேறி செல்லவில்லை. அப்போது, மிக நெருங்கிய தொடர்பு உள்ளதே என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் திரும்பிச் சென்று வீட்டில் கட்டப்பட்டிருந்த ஒரு வலிமையான ஒட்டகத்தை பிடித்துக் கொண்டார்கள். மேலும் இரண்டு மூட்டைகளில் தானியங்களை நிறைத்தார்கள். மேலும் அவற்றை சுமந்து வந்தார்கள். மேலும் அந்த பெண்மணிக்கு முன்னால் ஆண்டு முழுவதற்குமான செலவீனங்களுக்கான பொருட்களையும், ஆடைகளையும் வைத்து விட்டார்கள். மேலும் அந்த ஒட்டகத்தின் கடிவாளத்தை அந்தப் பெண்ணின் கரத்தில் கொடுத்து விட்டார்கள். மேலும் இதைக் கொண்டு செல்லுங்கள். இது முடிவடைவதற்குள் அல்லாஹ் உமக்கு மேலும் வழங்கி விடுவான் என்று கூறினார்கள். அப்போது அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் அவருக்கு அதிகமாக கொடுத்து விட்டீர்கள் என்று ஒரு நபர் கூறினார். உனது தாய் உம்மை இழப்பாராக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அந்தப் பெண்ணின் தந்தையையும், அவரது சகோதரரையும் இன்று வரை பார்த்துக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் ஒரு நீண்ட காலமாக ஒரு கோட்டையை முற்றுகையிட்டிருந்தார்கள். அதனை இறுதியில் அவர்கள் வெற்றி கொண்டு விட்டார்கள். அதற்கு பிறகு காலை நேரத்தில் நாங்கள் அவர்கள் இருவருக்குரிய பங்குகளை எங்களுக்கு மத்தியில் பங்கிட்டு விட்டோம். அந்தக் கோட்டையை அவர்கள் இருவரும் வெற்றி கொண்டு விட்டார்கள். அதன் போர் செல்வங்கள் அனைத்து முஸ்லிம்களுக்கும் கிடைத்தன. ஆக ஒரு வகையில் நாங்கள் அவர்களின் பங்கையே பங்கிட்டோம்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கஸ்வா ஹுதைபியா, ஹதீஸ் எண் 4460, 4161)

வயதான, ஊனமுற்ற மற்றும் தேவையுடைய பெண்கள் மற்றும் ஏனைய மக்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எவ்வாறு கருத்தில் கொண்டிருந்தார்கள்? இது தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இரவின் இருளில் வீட்டை விட்டு வெளியேறினார்கள். அதனை ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கண்டு விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு வீட்டினுள் நுழைந்தார்கள். பிறகு வேறொரு வீட்டில் நுழைந்தார்கள். பொழுது விடிந்த பிறகு ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அந்த வீடுகளில் ஒரு வீட்டிற்கு சென்றார்கள். அந்நிலையில் கண் பார்வையற்ற, வயது முதிர்ந்த பெண்மணி அமர்ந்திருந்தார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் அந்த பெண்ணிடம் இவ்வாறு கேட்டார்கள். உங்களிடத்தில் இரவு நேரத்தில் வருகின்ற நபர் என்ன செய்கின்றார்? அதற்கு அந்த நபர் நீண்ட காலமாக எனக்கு தொண்டாற்றி வருகின்றார். மேலும் எனது பணிகளை சரி செய்து கொடுக்கின்றார். எனது அசுத்தங்களை அகற்றுகின்றார் என்று அந்த பெண்மணி கூறினார். இதைக்கேட்ட ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் வெட்கத்தால் தம்மை நோக்கி கூறினார்கள்: தல்ஹாவே! உமது தாய் உம்மை இழக்கட்டுமாக. அந்தோ! பரிதாபம்! நீ உமர் (ரலி) அவர்களின் தடுமாற்றங்களை தேடிக் கொண்டிருக்கின்றாய். ஆனால் இங்கு விவகாரமோ வேறொன்றாக உள்ளது. இது எத்துனை வருத்தத்திற்குரிய விஷயமாகும்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 58)

குடிமக்களுக்கு தொண்டாற்றுவதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நிலைநாட்டியிருந்த மகத்துவமிக்க தரம் இவ்வாறு இருந்தது. பொது மக்கள், ஏழைகள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் தேவைகளை முழுமை செய்வது தொடர்பாக ஏராளமான அறிவிப்புகள் உள்ளன. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது

அச்சம் கொண்டவாறு அதனை எவ்வாறு முழுமை செய்து வந்தார்கள்? மேலும் எவ்வாறு அந்தப் பணிகளை செய்வதற்கு நிம்மதியிழந்து வந்தார்கள்? என்பதும் அதில் இடம் பெற்றுள்ளது. தனது குடிமக்களில் தனது தேவை பூர்த்தியாகாத நபர் ஒருவர் இருக்கின்றார் என்பதை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் காணும்போது மிகவும் நிம்மதியிழந்து விடுவார்கள்.

அதற்கான சில உதாரணங்களை முந்தைய சில குத்பாக்களில் பல்வேறு சான்றுகளின் அடிப்படையில் எடுத்துரைத்து விட்டேன். உதாரணமாக, இரவு நேரத்தில் குழந்தை அழுவதற்கான காரணத்தை அன்னார் (ரலி) அவர்கள் ஒரு பெண்ணிடம் ஒரு சந்தர்ப்பத்தில் கேட்கின்றார்கள். அப்போது அந்தபெண் கூறினார்: உமர் (ரலி), பால்குடி குழந்தைகளுக்கு ரேஷன் பொருட்களை நியமிக்கவில்லை. எனவே இந்தப் பிள்ளைக்கு தானியங்களை உண்பதற்கான பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக நான் பாலூட்டவில்லை. எனவே இது பசியால் அழுது கொண்டிருக்கின்றது என்று அந்தப் பெண்மணி கூறினார். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நிம்மதியிழந்து விட்டார்கள். மேலும் உடனடியாக உண்பதற்கும், குடிப்பதற்குமான ஏற்பாட்டைச் செய்து விட்டார்கள். மேலும் எதிர்காலத்தில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ரேஷன் பொருட்கள் வழங்கப்படும் என அறிவிப்பு செய்தார்கள்.

(அல்பதாயா வந்நஹாயா லி இப்னி கஸீர் பக்கம் 185, 186 – 1997 ஆம் ஆண்டு தாருல் ஹிஜ்ரில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று ஒரு சந்தர்ப்பத்தில் பயணியாக இருந்த ஒரு பெண்ணிடம் உண்பதற்கு எதுவும் இல்லாமல் இருந்தது. இரவில் ஓரிடத்தில் முகாமிடுவதற்கான சூழல் ஏற்பட்டது. மேலும் குழந்தைகள் பசியால் அழுது கொண்டிருந்தனர். இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அது பற்றி தெரிய வந்தபோது அன்னார் உடனடியாக குடோனிற்கு சென்று உண்பதற்கும், பருகுவதற்குமான பொருட்களை சுமந்து கொண்டு அந்தப் பெண்ணை வந்தடைந்தார்கள். மேலும் அன்னார் நிம்மதியிழந்து விட்டார்கள். உணவு சமைத்து அந்தப் பிள்ளைகளுக்கு உணவை வழங்கி விட்டு அந்தப் பிள்ளைகள் அதனால் சிரிப்பதை பார்த்து விடாத வரை அன்னாருக்கு நிம்மதி ஏற்படவில்லை. அதன் பிறகு தான் அன்னார் (ரலி) அவர்கள் அந்த இடத்தை விட்டு திரும்பி வந்தார்கள்.

(தாரீக் திப்ரி லி இப்னீ ஜரீர் தொகுதி 5 பக்கம் 62 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பாருங்கள். அன்னாரின் திகில் மற்றும் பேராண்மையின் காரணமாக ஒரு பக்கம் உலகின் பெரும் பெரும் அரசர்கள் அஞ்சிக் கொண்டிருந்தனர். கைஸர் மற்றும் கிஸ்ராவின் பேரரசாங்கங்கள் கூட அஞ்சி நடுக்கிக் கொண்டிருந்தன. ஆனால் மற்றொரு பக்கம் இருள் சூழ்ந்த இரவில் ஒரு காட்டரபி பெண்மணி தமது பிள்ளைகளுடன் பசியுடன் இருப்பதை அன்னார் கண்டபோது உமர் (ரலி) போன்ற மகத்துவமிக்க அந்தஸ்தை கொண்ட மனிதர் அஞ்சினார். மேலும் அவர் தமது முதுகில் கோதுமையின் மூட்டையை சுமந்து வந்தார். மேலும் நெய் டப்பாவை தனது கையில் தூக்கிக் கொண்டு அவர்களிடம் வந்தடைந்தார். மேலும் தமது கைகளால் உணவு சமைத்துக் கொடுத்து அந்தப் பிள்ளைகள் உண்டு விட்டு நிம்மதியாக உறங்கி விடாத வரை அன்னார் (ரலி) அவர்கள் அந்த இடத்திலிருந்து திரும்பிச் செல்லவில்லை.

(ஸேரே ரூஹானீ (6), அன்வாருல் உலூம் தொகுதி 22 பக்கம் 596)

அடுத்து ஒரு சம்பவம் ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியாவிலிருந்து மதீனாவிற்கு திரும்பி வந்தார்கள். அப்போது மக்களின் நிலைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக மக்களிடமிருந்து விலகிக் கொண்டார்கள். அதாவது அந்தக் குழுவினரிடமிருந்து விலகிக் கொண்டார்கள். ஒரு பக்கமாக சென்றார்கள். அதன் மூலம் மக்களின் நிலைகளை அறிந்து கொள்ள அன்னார் விரும்பினார்கள். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் ஒரு வயது முதிர்ந்த பெண்மணியை கடந்து சென்றார்கள். அந்தப் பெண்மணி தனது கூடாரத்தில் இருந்தார். அன்னார் (ரலி) அவர்கள் அந்தப் பெண்ணை விசாரிக்கத் தொடங்கினார்கள். அப்போது அந்த பெண்மணி, மனிதரே! உமர் என்னென்ன செய்தார் என்று பார்த்தீரா? என்று கேட்டார். அதற்கு அவர் இங்கே தானே உள்ளார். சிரியாவிலிருந்து வந்து விட்டார் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது அந்தப் பெண்மணி இறைவன் அவருக்கு என் சார்பாக நற்கூலியை வழங்கக்கூடாது என்று கூறினார். உம் மீது பரிதாபம்! ஏன்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். நீங்கள் ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண்மணி, அவர் கலீஃபா ஆனதிலிருந்து இன்றைய தினம் வரை எனக்கு அவரது எந்த அன்பளிப்பும் கிடைக்கவில்லை. எந்த தீனாரும் கிடைக்கவில்லை. எந்த திர்ஹமும் கிடைக்கவில்லை என்று கூறினார். உம் மீது பரிதாபம். உமது நிலை பற்றி உமருக்கு எப்படி தகவல் தெரியும்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

பேசிக் கொண்டிருப்பவர் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆவார்கள் என்பதை அந்தப் பெண்மணி அறிந்திருக்கவில்லை. நீரோ ஓரிடத்தில் அமர்ந்திருக்கின்றீர். தொலைதூர காட்டில் நீர் அமர்ந்திருக்கின்றீர். அவ்வாறிருக்க உம்மைப் பற்றி உமருக்கு எப்படி தெரிய வரும்? சுப்ஹானல்லாஹ்! சுப்ஹானல்லாஹ்!! ஒருவர் மக்களின் ஆட்சியாளராக ஆகி விடுகின்றார். ஆனால் கிழக்கிலும், மேற்கிலும் என்ன உள்ளது என்று அறியாதவராக அவர் இருக்கின்றார் என்று அந்த பெண்மணி கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுது கொண்டே அந்தப் பெண்ணை நோக்கி சென்றார்கள். மேலும் உமரே! பரிதாபம். இதுபோன்று எத்தனை வாதிகள் இருப்பார்கள்! ஒவ்வொருவரும் உம்மை விட அதிகமாக மார்க்கத்தை புரிந்தவராக இருக்கின்றனர். உமரே! புரிந்து கொள் என்று அன்னார் (ரலி) அவர்கள் தமக்குத்தாமே கூறிக் கொண்டே சென்றார்கள்.

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நீர் அநீதியிழைக்கப்பட்டதற்கு பகரமாக உமது உரிமையை அவரின் கரத்தில் எவ்வளவு தொகைக்கு விற்கின்றீர்? அதாவது நான் அவரை நரகத்திலிருந்து பாதுகாக்க விரும்புகிறேன் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பாதுகாக்க விரும்புகின்றேன் என்று கூறினார்கள். நீர் அநீதி இழைக்கப்பட்டதற்கான உமது உரிமையை எவ்வளவு தொகைக்கு விற்கின்றீர்? என்று கூறும். அப்போது எங்களுடன் விளையாடாதீர்கள். இறைவன் உங்கள் மீது கருணை செய்வானாக என்றும் அந்தப் பெண்மணி கூறினார். இது விளையாட்டல்ல என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தப் பெண்ணிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறிக் கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் அந்தப் பெண்ணின் அநீதி இழைக்கப்பட்டதற்கான உரிமையை 25 தினார் தொகைக்கு பெற்றுக் கொண்டார்கள். அப்போது அந்த விஷயம் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அந்நிலையில் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் ஆகியோர் வந்தார்கள். அவர்கள் இருவரும் اَلسَّلَامُ عَلَيْكَ يَا اَمِيْرَ الْمُؤْمِنِيْنَ என்று கூறினார்கள். அப்போது அந்தப் பெண்மணி தனது கையை தனது தலை மீது வைத்து விட்டார். அல்லாஹ் காப்பாற்றுவானாக. நான் அமீருல் மூமினீன் அவர்களுக்கு முன்னால் அன்னாரை ஏசிப்பேசி விட்டேன் என்று அந்தப் பெண்மணி கூறினார். அப்போது உம் மீது எந்த குற்றமும் இல்லை. இறைவன் உம்மீது கருணை காட்டுவானாக என்று அமீருல் மூமினீன் (ரலி) அவர்கள் கூறினார்கள். அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் (எழுதுவதற்கு) ஒரு தோலின் பகுதியை கேட்டார்கள். அதில் எழுதினார்கள்: ஆனால் அது எழுதவில்லை. பின்னர் தான் போர்த்தியிருந்த தனது போர்வையிலிருந்து ஒரு துண்டை கிழித்தார்கள். மேலும் அதில் எழுதினார்கள்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இன்றைய நாளில் இன்ன பெண்மணிக்கு எழுதிக் கொடுக்கும் மடலாகும். உமர் அந்தப் பெண்ணின் அநீதி இழைக்கப்பட்டதற்கான உரிமையை 25 தினார் தொகைக்கு வாங்கிக் கொண்டார். அவர் ஆட்சியாளராக இருந்ததிலிருந்து இன்று வரை அதைப் பெற்றுக் கொண்டார். அவர் தற்போது அல்லாஹ்வின் முன்னால் மறுமையில் ஏதாவது முறையீடு செய்தால் உமர் அதற்கு பொறுப்பாக மாட்டார். அலி பின் அபீ தாலிப் மற்றும் அப்துல்லாஹ் பின் மசூத் ஆகியோர் இதற்கு சாட்சிகளாக உள்ளனர். பின்னர் அந்த மடலை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். நான் உங்களுக்கு முன்னால் உலகை விட்டு சென்று விட்டால் எனது கஃபனில் இதனை வைத்து விட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(இஸாலத்துல் ஹஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா தொகுதி 3 பக்கம் 276–278 – கராச்சியிலுள்ள கதீமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

பிள்ளைகளுக்கு வரன் பார்ப்பதற்கு மக்கள் எப்படிப்பட்ட அளவுகோலை வைத்துள்ளனர்? இன்றைய நாட்களிலும் நாம் பார்க்கின்றோம். பெரும் பெரும் அளவுகோலை மக்கள் வைத்துள்ளனர். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு என்ன அளவுகோல் இருந்தது? இது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகின்றது.

ஹஸ்ரத் அஸ்லம் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள்.

இரவுகளில் ஓர் இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் நான் மதீனாவின் சுற்றுவட்டாரத்தில் வலம் வந்து கொண்டிருந்தேன். அன்னார் (ரலி) அவர்கள் சிறிது நேரத்திற்காக ஓய்வெடுப்பதற்கு ஒரு சுவரின் பக்கம் அமர்ந்தார்கள். அது ஒரு வீட்டின் சுவராக இருந்தது. அதைக் தாங்கிக் கொண்டு அமர்ந்து கொண்டார்கள். அப்போது வீட்டினுள் ஒரு வயதான பெண்மணி தனது மகளிடம் இவ்வாறு கூறிக் கொண்டிருந்ததை அன்னார் (ரலி) அவர்கள் கேட்டார்கள். எழுந்திரு. பாலில் தண்ணீரை கலந்து விடு என்று அவர் கூறினார்.

அப்போது அந்த மகள் கூறினார்: பாலுடன் தண்ணீரை கலக்கக்கூடாது என்று அமீருல் மூமினீன் அவர்களின் அறிவிப்பாளர் அறிவிப்பு செய்துள்ளது உங்களுக்கு தெரியாதா? என்று கேட்டார். அதற்கு தற்போது அமீருல் மூமினீன் அவர்களும் இல்லை. அன்னாரின் அறிவிப்பாளரும் இல்லை என்று தாய் கூறினார். இறைவன் மீது ஆணையாக! இந்த விஷயம் நமக்கு ஆகுமானதல்ல. அவர்களுக்கு முன்னால் நாம் கட்டுப்பட்டு விட்டு தனிமையில் கட்டுப்படாமல் இருப்பது நமக்கு உகந்ததல்ல என்று அந்த மகள் கூறினார்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் தன்னுடன் இருந்தவரிடம் அஸ்லமே! இந்த வீட்டின் மீது அடையாளம் இடு. இதன் வாசலில் ஓர் அடையாளத்தை இடுவீராக என்று கூறினார்கள். அடுத்த நாள் அன்னார் (ரலி) அவர்கள் ஒருவரை அனுப்பினார்கள். அந்த பெண்ணின் வரனை தனது மகனாகிய ஆஸிமுடன் செய்து கொண்டார்கள். அந்தப் பெண்ணின் உண்மை மற்றும் நன்மையைப் பார்த்தவாறு தனது மகனின் வரணை அந்தப் பெண்ணுடன் செய்து விட்டார்கள். அந்த பெண்ணின் மூலமாக ஆஸிமிற்கு ஒரு மகள் பிறந்தாள். ஹஸ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் அதே பெண்ணின் பிள்ளைகளை சார்ந்தவராக இருந்தார்.

(இஸாலத்துல் ஹஃபா அன் கிலாஃபத்துல் குலஃபா தொகுதி 3 பக்கம் 281–282 – கராச்சியிலுள்ள கதீமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. சல்மா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை நான் கடைவீதியை கடந்து சென்று கொண்டிருந்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஒரு வேலையாக அங்கு கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் கரங்களில் ஒரு சாட்டை இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: சல்மாவே! இவ்வாறு வழிப்பாதையிலிருந்து விலகிச் செல்வீராக என்று கூறினார்கள். பின்னர் என் மீது சிறிது சாட்டையை அடித்தார்கள். ஆனால் சாட்டை எனது ஆடையின் ஓரத்திலேயே பட்டது. எனவே நான் வழிப்பாதையை விட்டு விலகி விட்டேன். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் மௌனமாகி விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் அந்த சம்பவம் நடந்து ஓர் ஆண்டு ஆகி விட்டது.

பின்னர் ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் கடைவீதியில் எனது சந்திப்பு நிகழ்ந்தது. அன்னார் (ரலி) அவர்கள், சல்மாவே! இந்த ஆண்டு ஹஜ்ஜிற்கு செல்வதற்கு எண்ணம் உள்ளதா? என்று கேட்டார்கள். ஆம்! அமீருல் மூமினீன் அவர்களே என்று நான் கூறினேன். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் எனது கரத்தை பிடித்தார்கள். மேலும் என்னை வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். மேலும் ஒரு பையிலிருந்து 600 திர்ஹமை எனக்குக் கொடுத்தார்கள். மேலும் சல்மாவே இதனை உமது தேவையை பூர்த்தி செய்து கொள்ள பயன்படுத்திக் கொள். ஓராண்டுக்கு முன்பாக நான் உன் மீது சாட்டையை அடித்தேன். அதற்கு பகரமாக இதை வைத்துக் கொள் என்று கூறினார்கள். சல்மா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் கூறினேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அமீருல் மூமினீன் அவர்களே! நான் அந்த விஷயத்தை முற்றிலும் மறந்து விட்டேன். இன்று தாங்கள் அதனை நினைவுபடுத்தி விட்டீர்கள்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 98)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் கண்காணித்து வந்தார்கள். அதாவது கடை வீதிகளில் எந்தவொரு நபரின் குடியுரிமையும் பாதிக்கப்படாத அளவில் பொருட்களின் விலைகள் இருக்க வேண்டும் என்பதை கண்காணித்து வந்தார்கள். எனவே இந்த விஷயத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் சிக்கல்கள் இல்லாமல் இருப்பதும் குடியுரிமைகளில் அடங்கும். நாம் பார்க்கின்றோம். இஸ்லாம் இந்த உரிமையை கூட புறக்கணிக்கவில்லை. எனவே தான் இஸ்லாம் பொருட்களின் விலையை உயர்த்துவதற்கும், அதிக விலையில் விற்பதற்கும் தடை செய்துள்ளது. அதேபோன்று மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதையும், பிறரை வியாபாரத்தில் வீழ்த்துவதற்காக விலையை குறைப்பதையும் தடுத்துள்ளது. இன்றைய நாட்களில் மார்க்கட்டில் இது நடைபெறுகிறது.

ஒரு முறை மதீனாவில் ஒரு நபர் இதுபோன்று குறைந்த விலையில் திராட்சைப் பழத்தை விற்றுக் கொண்டிருந்தார். அந்த விலையில் மற்ற கடைக்காரர்களால் விற்பனை செய்ய முடியாமல் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த இடத்தை கடந்து சென்றபோது அந்த நபரை அன்னார் கண்டித்தார்கள். ஏனென்றால் இதன் மூலம் ஏனைய கடைக்காரர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

சுருக்கமாக இஸ்லாம் அதிக விலையில் பொருட்களை விற்பதற்கு தடை செய்துள்ளது. அதே நேரம் மிக குறைந்த விலையில் விற்பதற்கும் தடுத்துள்ளது. இதன் மூலம் கடைக்காரர்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது. பொது மக்களுக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பற்காக அவ்வாறு செய்துள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 307)

ஆமிர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். அவர் கூறினார்: எனக்கு ஒரு மகள் இருந்தார். அவரை நான் அறியாமை காலத்தில் உயிருடன் மண்ணில் புதைத்து விட்டேன். ஆயினும் அவர் இறப்பதற்கு முன்பாகவே அவரை நான் வெளியில் எடுத்து விட்டேன். அவர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அல்லாஹ் விதித்துள்ள தண்டனைகளில் ஒரு தண்டனை அவர் மீது பொருந்தியது. தவறான செயல் செய்ததன் காரணமாக அவருக்கு அந்த தண்டனை கிடைத்தது. அவர் ஒரு கத்தியை எடுத்து அதன் மூலம் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார். நான் அவரை பிடித்து விட்டேன். அப்போது அவர் தனது சில நரம்புகளை துண்டித்திருந்தார். பின்னர் நான் அதற்கு சிகிச்சை செய்தேன். எந்த அளவுக்கென்றால் அவர் சரியாகி விட்டார். அதன் பிறகு அவர் தவ்பா செய்து விட்டார். மிக நல்ல முறையில் தவ்பா செய்தார். அமீருல் மூமினீன் அவர்களே! தற்போது அவருக்கு நிக்காஹ்விற்கான வரன்கள் வந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பெண்ணிற்கு வரன்கள் வந்து கொண்டிருக்கின்றன. எனவே முந்தைய வாழ்க்கை எப்படி இருந்தது? என்று அந்தப் பெண்ணின் விவகாரங்களைப் பற்றி நாம் கூற வேண்டுமா? என்று கேட்டார். அதாவது அந்தப் பெண்ணின் முந்தைய வாழ்க்கை எப்படி இருந்தது? அவருடன் என்னவெல்லாம் நடந்து வந்தது? தன்னுடன் அவர் எவ்வாறு நடந்து கொண்டார் என்றெல்லாம் கூற வேண்டுமா? என்று கேட்டார்.

அதற்கு அல்லாஹ் அந்தப் பெண்ணின் குறை மீது திரையிட்டுள்ளான். நீர் அதை வெளிப்படுத்தி விடுவீரா? என்று அந்த நபரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒருவேளை அந்தப் பெண்ணின் விவகாரத்தை குறித்து நீர் எவருக்காவது கூறி விட்டால் பின்னர் நான் முழு நகரவாசிகளுக்கும் முன்னிலையில் படிப்பினைக்குரிய அடையாளமாக உம்மை ஆக்கி விடுவேன். எனவே அந்தப் பெண்ணின் திருமணத்தை ஒரு தூய முஸ்லிம் பெண்ணின் திருமணத்தைப் போன்று நடத்துவீராக. ஏனைய விஷயங்களை மறந்து விடுவீராக என்று கூறினார்கள்.

(தஃப்ஸீர் திப்ரி தொகுதி 6 சூரா மாயிதா பக்கம் 127 – 2001 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

அமவாஸ் எனும் இடத்தில் தோன்றிய பிளேக் நோய் மற்றும் மக்களின் உயிர்களைப் பற்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இருந்த கவலை தொடர்பாக வருகின்றது. ரமலாவிலிருந்து பைத்துல் முகத்தஸ் வழிப்பாதையில் 6 மைல் தொலைவில் ஒரு பள்ளத்தாக்கு உள்ளது. அதன் பெயர் அமவாஸ் ஆகும். வரலாற்று நூலில் எழுதப்பட்டுள்ளது: இங்கிருந்து தான் பிளேக் நோய் ஆரம்பமானது. பின்னர் சிரியா நாட்டில் பரவி விட்டது. எனவே இந்த இடம் தாவூன் அமவாஸ் என்று கூறப்படுகின்றது. இந்த நோயினால் சிரியாவில் எண்ணற்ற மரணங்கள் நிகழ்ந்தன. சிலரின் பார்வையில் 25 ஆயிரம் வரை மரணங்கள் நிகழ்ந்தன.

ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து சிரியாவிற்கு புறப்பட்டார்கள். சுருக் என்ற இடத்தை அடைந்து படை வீரர்களை சந்தித்தார்கள். சுருக் என்ற இடம் சிரியா மற்றும் ஹஜாஸ் பகுதிகளின் எல்லைப்புற பகுதியில் தபூக் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள ஓர் ஊரின் பெயராகும். அமவாஸ் மண்ணில் நோய் பரவியுள்ளது என்ற தகவல் அன்னார் (ரலி) அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அப்போது அன்னார் (ரலி) அவர்கள் ஆலோசனைக்குப் பிறகு

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

திரும்பிச் சென்று விட்டார்கள். இதன் விளக்கம் சஹீஹ் புகாரியின் ஓர் அறிவிப்பில் இவ்வாறு கிடைக்கின்றது. இதற்கு முன்னரும் ஒரு முறை மற்றோர் ஆதாரத்தின் அடிப்படையில் இந்த சம்பவத்தின் சில பகுதிகள் எடுத்துரைக்கப்பட்டு விட்டன.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சரக் என்ற இடத்தை அடைந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் படையின் தலைவர்களான ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) மற்றும் அன்னாரின் தோழர்களை சந்தித்தார்கள். சிரியா நாட்டில் பிளேக் எனும் தொற்று நோய் பரவியுள்ளது என்று அந்த மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஹாஜிர்களில் முதன்மையான சஹாபிகளை ஆலோசனைக்காக தம்மிடம் அழைத்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அவர்களிடமிருந்து ஆலோசனை கேட்டார்கள். ஆனால் முஹாஜிர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இங்கிருந்து பின் வாங்கக் கூடாது என்பது சிலரின் கருத்தாக இருந்தது. அதேநேரம் வேறு சிலர் இவ்வாறு கூறினர். இந்தப் படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளும் பங்கு பெற்றுள்ளனர். அவர்களை இந்த தொற்றில் ஆழ்த்துவது ஆகுமானதல்ல என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முஹாஜிர்களை அனுப்பி விட்டு அன்ஸார் சஹாபிகளை அழைத்தார்கள். அவர்களுடன் ஆலோசனை செய்தார்கள். ஆனால் அன்ஸார் சஹாபிகளின் கருத்திலும் முஹாஜிர்களைப் போன்று கருத்து வேறுபாடு ஏற்பட்டு விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்ஸார் சஹாபிகளையும் அனுப்பி விட்டார்கள். பின்னர் குரைஷிகளில் வயது முதிர்ந்தவர்களை அழைக்கும்படி கூறினார்கள். மக்கா வெற்றியின்போது இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு வந்திருந்த நபர்களை அழைக்கும்படி கூறினார்கள். அவர்கள் அழைக்கப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றுபட்ட குரலில் இந்த மக்களை அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்று விடுங்கள். தொற்று நோய் பரவும் பகுதிகளில் மக்களை அழைத்துக் கொண்டு செல்லாதீர்கள் என்று அவர்கள் ஆலோசனை வழங்கினர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்கள் அனைவரும் திரும்பிச் செல்லும்படி அறிவிப்பு செய்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் இந்த கேள்வியை கேட்டார்கள். அல்லாஹ்வின் நியதியிலிருந்து ஓடுவது சாத்தியமா? என்று கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அபூ உபைதாவே! அந்தோ! உம்மைத் தவிர்த்து வேறு எவராவது இந்த விஷயத்தை கூறியிருக்க வேண்டுமே! ஆம்! நாம் அல்லாஹ்வின் (ஒரு) நியதியிலிருந்து விலகி அல்லாஹ்வின் (மற்றொரு) நியதியின் பக்கமே செல்கின்றோம் என்று ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

உங்களிடத்தில் உள்ள ஒட்டகத்தை அழைத்துக் கொண்டு இரண்டு வழிகள் உள்ள அல்லது இரண்டு கரைகள் உள்ள பள்ளத்தாக்கில் இறங்குவதைப் போன்றதாகும். ஒரு பக்கம் பசுமையானதாகவும், மற்றொரு பக்கம் வறண்டதாகவும் இருந்தால் நீங்கள் உங்களது ஒட்டகத்தை பசுமையான பகுதிக்கு மேய்ப்பதற்கு கொண்டு சென்றால் அது அல்லாஹ்வின் நியதிக்கு ஏற்புடையதாகும். நீங்கள் அதனை வறண்ட பகுதிகளில் மேய்ப்பீர்கள் என்றால் அதுவும் அல்லாஹ்வின் நியதியால் ஆகும்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதற்குள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களும் வந்து விட்டார்கள். அன்னார் அதற்கு முன்பு தனது மும்முரமான பணிகளின் காரணமாக அங்கு அவரால் வர முடியாமல் இருந்தது. என்னிடத்தில் இந்த விவகாரத்திற்கான தீர்வு உள்ளது என்று அன்னார் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் செவிமடுத்துள்ளேன். அதாவது ஓரிடத்தில் ஒரு தொற்று பரவியுள்ளது என்று நீங்கள் செவியுற்றால் நீங்கள் அங்கே செல்லாதீர்கள். ஏதாவது ஒரு நோய் நீங்கள் வசிக்கின்ற இடத்தில் பரவுவதாக நீங்கள் அறிந்தால் அங்கிருந்து தப்பித்து வெளியேறாதீர்கள். அப்போது அல்லாஹ்விற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நன்றி தெரிவித்து திரும்பி வந்து விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் திப்.... ஹதீஸ் எண் 5729 & அத்தபகத்துல் குப்ரா லி இப்னி சஅத் தொகுதி 3 பக்கம் 214, 215 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மதீனாவிலிருந்து வந்திருந்தார்கள். இன்னும் அன்னார் தொற்று பரவியிருந்த இடத்தை அடைந்திருக்கவில்லை. எனவே தமது தோழர்களை அழைத்துக் கொண்டு திரும்பி வந்து விட்டார்கள். ஆனால் படைகளின் தளபதியாக இருந்த ஹஸ்ரத் அபூஉபைதா (ரலி) அவர்கள் ஏற்கனவே தொற்று நோய் பரவியிருந்த இடத்தில் தங்கியிருந்தார்கள். எனவே அன்னாரும் முஸ்லிம் படைகளும் பிளேக் நோய் பாதிக்கப்பட்ட பகுதியிலேயே இருந்தனர். எவர்கள் எங்கு இருந்தார்களோ அவர்கள் அங்கேயே இருந்தனர். மதீனா வந்தடைந்த பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சிரியா முஸ்லிம்கள் தொடர்பாக சிந்திக்க துவங்கினார்கள். அதாவது அவர்களை பிளேக் நோயின் அழிவிலிருந்து எவ்வாறு காப்பாற்றுவது? என்று சிந்தித்தார்கள்.

குறிப்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களைப் பற்றிய அதிக கவலை இருந்தது. ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். உங்களிடம் எனக்கு ஒரு முக்கிய பணி உள்ளது. எனவே இந்த கடிதம் கிடைத்தவுடன் நீங்கள் உடனடியாக மதீனாவிற்கு புறப்பட்டு விடுங்கள். கடிதம் இரவில் கிடைத்தால் காலை வரை காத்திருக்க வேண்டாம். கடிதம் காலையில் கிடைத்தால் இரவு வரை காத்திருக்க வேண்டாம் என்று அதில் எழுதியிருந்தார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மீது அன்னாருக்கு இருந்த அன்பு இதுவாகும். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் அந்த கடிதத்தை படித்தபோது நான் அமீருல் மூமினீன் அவர்களின் தேவைகளை அறிவேன். அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கருணை செய்வானாக. எஞ்சியிருக்காத ஒன்றை எஞ்சியிருக்க செய்ய அன்னார் விரும்புகின்றார்கள் என்று கூறினார்கள். அதாவது என்னுடன் என்ன நடக்க இருக்கின்றதோ அதை அல்லாஹ் அறிந்திருக்கின்றான். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் இவ்வாறு சிந்தித்தார்கள். இந்த கடிதத்திற்கு இவ்வாறு பதில் அளித்தார்கள். அமீருல் மூமினீன் அவர்களே! நான் தங்களின் விருப்பத்தை புரிந்து கொண்டேன். என்னை அழைக்காதீர்கள். இங்கேயே இருக்க விடுங்கள். நான் முஸ்லிம் போர் வீரர்களில் ஒருவன் ஆவேன். நிச்சயிக்கப்பட்டது நடந்தே தீரும். நான் அதிலிருந்து எவ்வாறு முகம் திருப்ப முடியும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த கடிதத்தை படித்ததும் அழுதார்கள். அமீருல் மூமினீன் அவர்களே! ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் மரணித்து விட்டார்களா என்ன? என்று அங்கிருந்தவர்கள் கேட்டார்கள். அதற்கு இல்லை. ஆனால் ஒருவேளை மரணித்து விடக் கூடும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(ஸேரே அஸ்லாமுன் நப்லா தொகுதி 1 பக்கம் 18, 19, அபூஉபைதா பின் ஜராஹ் – 2014 ஆம் ஆண்டு டெமாஸ்கஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கக்கூடிய சஹாபிகளின் ஆலோசனைக்குப் பிறகு ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள். நீங்கள் பள்ளத்தாக்கில் இறங்கியுள்ளீர்கள். எனவே உயரமான இடத்திலும், திறந்த வெளி மைதானத்திற்கும் செல்லுங்கள். தாழ்வான பகுதிக்கு பகரமாக மலைப்புற பகுதிக்கு செல்லுங்கள். அதாவது காற்று சற்று சுத்தமாக இருக்கின்ற இடத்திற்கு செல்லுங்கள் என்று எழுதினார்கள். ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களும் இந்த கட்டளையை செயல்படுத்துவது தொடர்பாக சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் பிளேக் நோய் அன்னாரை தாக்கியது. அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை தனது பிரதிநிதியாக நியமனம் செய்தார்கள். ஆனால் அன்னாரும் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டார்கள். மேலும் மரணித்து விட்டார்கள். ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களை தனது பிரதிநிதியாக ஆக்கினார்கள். அன்னார் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அதில் கூறினார்கள்: இந்த தொற்று பரவும்போது நெருப்பை போன்று பரவும். மலைகளில் ஒளிந்து கொண்டு உங்களின் உயிர்களை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அன்னார் மக்களை அழைத்துக் கொண்டு அங்கிருந்து சென்றார்கள். மலைகளுக்குச் சென்று விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் தொற்றின் தாக்கம் குறைந்து விட்டது. குறைந்து, குறைந்து முற்றிலும் முடிந்து விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் இந்த சொற்பொழிவைப் பற்றி தெரிய வந்தது. அப்போது அன்னார் அதனை விரும்ப மட்டும் செய்யவில்லை. மாறாக ஹஸ்ரத் அபூ

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

உபைதா (ரலி) அவர்களுக்கு தான் அனுப்பிய அந்த கட்டளை இதன் மூலம் செயல்படுத்தப்பட்டது விட்டது என்று கூறினார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 413 – லாஹூரிலுள்ள குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூ உபைதா பின் ஜராஹ் (ரலி) மட்டுமின்றி ஹஸ்ரத் மஆஸ் வின் ஜபல் (ரலி), ஹஸ்ரத் யஸீத் பின் அபூ சுஃப்யான் (ரலி), ஹஸ்ரத் ஹாரிஸ் பின் ஹஷாம் (ரலி), ஹஸ்ரத் சுஹைல் பின் அம்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் சுஹைல் (ரலி) ஆகியோர் மட்டுமின்றி இன்னும் பல கண்ணியத்திற்குரியவர்களும் இந்த தொற்றினால் மரணித்து விட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 487 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தாவூன் அம்வாஸ் என்ற இடத்திலிருந்து திரும்பி வந்த குறிப்பை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் ஒரிடத்தில் கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: சிரியாவில் போர் நடைபெற்றபோது அங்கு பிளேக் நோய் பரவியது. மக்களின் ஆலோசனையுடன் படையின் பாதுகாப்பிற்கு ஏதாவது அறிவார்ந்த ஏற்பாட்டை செய்து விட வேண்டும் என்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அங்கு சென்றிருந்தார்கள். ஆனால் நோயின் தாக்கம் அதிகமாகி விட்டபோது சஹாபிகள் இவ்வாறு கூறினர். தாங்கள் இங்கு தங்கியிருப்பது உகந்ததல்ல. தாங்கள் மதீனாவிற்கு திரும்பிச் சென்று விடுங்கள். அன்னார் (ரலி) அவர்கள் திரும்பிச் செல்வதற்கு எண்ணம் கொண்டபோது أَفِرَارًا مِنْ قَدَرِ اللهِ؟ (அதாவது அல்லாஹ்வின் நியதியிலிருந்து தாங்கள் ஓடுகின்றீர்களா?) என்று ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாக نَعَمْ نَفِرُّ مِنْ قَدَرِ اللهِ إِلَى قَدَرِ اللهِ என்று பதிலளித்தார்கள். ஆம்! நாங்கள் அல்லாஹ்வின் ஒரு இறை நியதியிலிருந்து மற்றோர் இறை நியதியின் பக்கம் செல்கின்றோம். சுருக்கமாக உலக ஏற்பாடுகளை கைவிட்டு விடுவது ஆகுமானதல்ல. ஆயினும் உலக பொருட்களின் ஏற்பாடுகளை மார்க்கத்திற்கு உட்பட்டதாக வைத்துக் கொள்ள வேண்டும்.

(அல்லாஹ் தஆலா ஸே ஹகீகி தஅல்லுக் காயிம் கர்னே மேஹி ஹமாரி காம்யாபி, அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 104)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட சில சம்பவங்கள் உள்ளன. ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மக்கள் கடுமையான வறட்சிக்கு ஆளானார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுடன் புறப்பட்டார்கள். அவர்களுக்கு இரண்டு ரக்அத் இஸ்திஸ்கா (மழை வேண்டி) தொழுகையை நடத்தினார்கள். பின்னர் தனது போர்வையை தனது இரண்டு தோள்களிலும் போட்டுக் கொண்டார்கள். போர்வையின் வலது பக்கத்தை தோளின் இடது பக்கத்தில் போட்டுக் கொண்டார்கள். மேலும் இடது பக்க பகுதியை தோளின் வலது பக்கத்தில் போட்டுக் கொண்டார்கள். அதாவது போர்வையை சுற்றிக் கொண்டார்கள். பின்னர் தனது கரத்தை துஆவிற்காக உயர்த்தினார்கள்.

மேலும் اَللّٰهُمَّ اِنَّا نَسْتَغْفِرُكَ وَنَسْتَسْقِيْكَ என்று கூறினார்கள். அதாவது கம்பீரமிக்க அல்லாஹ்வே! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பாவமன்னிப்பு வேண்டுகிறோம். மேலும் மழையை வேண்டுகிறோம்.

தற்போது அன்னார் துஆ செய்து தனது இடத்திலிருந்து கூட பின்னால் விலகி இருக்கவில்லை. அதற்குள் மழை பொழியத் தொடங்கி விட்டது. அறிவிப்பாளர் கூறுகின்றார்: எங்களது கிராமத்து மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். மேலும் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! இன்ன இன்ன நாளில் இன்ன நேரத்தில் நாங்கள் எங்களது பாலைவன வீடுகளில் இருந்தோம். மேகங்கள் எங்கள் மீது மழையை பொழிந்தன. மேலும் நாங்கள் அதிலிருந்து ஒரு குரலை கேட்டோம். அபூஹப்ஸ்! மலை மூலமாக உம்மிடம் வந்துள்ளது. அபூஹப்ஸ் மலை மூலமாக உம்மிடம் உதவி வந்துள்ளது என்ற சப்தம் வந்தது.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 4 ஹதீஸ் எண் 23533 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் துகுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாருடைய ஒரு துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பாக நைல் நதி ஓடியது குறித்தும் இவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது. இஸ்லாத்திற்கு முன்பு நைல் நதி வறண்டு வந்தது. அப்போது அங்கிருந்த மக்களிடம் அதனை ஓடச் செய்வதற்கான ஒரு சடங்கு இருந்தது. உள்ளபடியே இந்த சடங்கின் தாக்கம் இருந்ததா? அல்லது இல்லையா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆயினும் இஸ்லாம் தோன்றி அந்த சடங்கை நிறுத்து விட்டது. இந்த சடங்கை நிறுத்தியது தொடர்பாக எடுத்துரைக்கப்படும் சம்பவம் இவ்வாறாகும்.

கைஸ் பின் ஹஜ்ஜாஜ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எகிப்து வெற்றி கொள்ளப்பட்டபோது அங்குள்ள குடிமக்கள் அரபி அல்லாத மாதங்களின் ஒரு நாளில் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களிடம் வந்தார்கள். அமீரே! எங்களது நைல் நதிக்காக ஒரு சடங்கு உள்ளது. அதை நிறைவேற்றாமல் இந்த நதி ஓடுவதில்லை என்று மக்கள் கூறினர். அது என்ன? என்று ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். இந்த மாதத்தின் 11 இரவுகள் கழிந்த பிறகு நாங்கள் ஒரு கன்னிப் பெண்ணிடம் அவரது பெற்றோர்களின் முன்னிலையில் செல்வோம். பின்னர் அவரது பெற்றோர்களை சம்மதிக்க வைப்போம். மேலும் அவருக்கு சிறந்த ஆடைகளையும், நகைகளையும் அணிவிப்போம். பின்னர் அவரை நாங்கள் நைல் நதியில் வீசி விடுவோம் என்று கூறினர். அதாவது தொடக்கத்தில் அவ்வாறு வீசி வந்தார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள், இஸ்லாத்தில் அவ்வாறு ஒருபோதும் நடைபெறாது என்று கூறினார்கள். நிச்சயமாக இஸ்லாம் இந்த அனைத்து சடங்குகளையும் தடை செய்துள்ளது. இதற்கு முன்பு இருந்த அனைத்து சடங்களும் நிறுத்தப்பட்டன.

எனவே அவர்கள் அங்கு தங்கியிருந்தார்கள். இறுதியில் நைல் நதியும் வறண்டு விடக்கூடிய நேரம் வந்தது. அப்போது நைல் நதி முற்றிலும் ஓடவில்லை. எந்த அளவுக்கென்றால் மக்கள் நாட்டிலிருந்து வெறியேறுவதற்கான எண்ணம் கொண்டார்கள். மக்கள் அங்கிருந்து செல்வதற்கும், இடத்தை விட்டு விடுவதற்கும் எண்ணம் கொண்டார்கள். ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் இதனைக் கண்டபோது இது குறித்து ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு எழுதினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு பதில் அனுப்பினார்கள்: நீங்கள் கூறிய விஷயங்கள் எல்லாம் சரி தான். நிச்சயமாக இஸ்லாம் இந்த அனைத்து சடங்குகளையும் தடை செய்துள்ளது. மேலும் அன்னார் அந்த கடிதத்திற்குள் ஒரு சிறிய துண்டுச் சீட்டையும் வைத்து அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள்: நிச்சயமாக உங்களுக்கு அனுப்பிய கடிதத்திற்குள் ஒரு துண்டுச் சீட்டு உள்ளது. அதனை நைல் நதியில் வீசி விடவும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு கிடைத்தபோது அந்த துண்டுச் சீட்டை அன்னார் வெளியே எடுத்தார்கள். மேலும் அதனை திறந்து பார்த்தார்கள். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

அல்லாஹ்வின் அடியாரான உமர் பின் கத்தாப் அமீருல் மூமினீன் புறமிருந்து சார்பாக எகிப்தின் நைல் நதிக்கு இந்த மடல். நீ சுயமே ஓடுகின்றாய் என்றால் ஓட வேண்டாம். ஆனால் அல்லாஹ்வின் கட்டளையால் நீ ஓடுகின்றாய் என்றால் நான் ஏகனாகிய அல்லாஹ்விடம் துஆ செய்கின்றேன். அவன் உன்னை ஓடச் செய்வானாக.

எனவே ஹஸ்ரத் அம்ர் (ரலி) அவர்கள் அந்த துண்டுச் சீட்டை சிலுவை பண்டிகைக்கு ஒரு நாள் முன்பாக நைல் நதியில் வீசி விட்டார்கள். காலை விடிந்தபோது அல்லாஹ் ஒரே இரவில் 16 அடியை விட கூடுதலான தண்ணீரை நைல் நதியில் ஓடச் செய்து விட்டான். பின்னர் அல்லாஹ் எகிப்து வாசிகளின் அந்த சடங்கு சம்பிரதாயத்தை நிறுத்தி விட்டான்.

(ஜலாலுத்துன் சுயூத்தி அவர்கள் எழுதிய தாரீகுல் குலஃபா என்ற நூல், உமர் பின் கத்தாப் பக்கம் 100 – 1999 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் கிதாபுல் அரபிய்யில் அச்சிடப்பட்டது)

பெரும்பாலான வரலாற்று புத்தகங்களில் இந்த சம்பவத்தை ஆமோதித்து எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதக்கூடிய ஆசிரியர்களில் ஒருவரான முஹம்மது ஹுஸைன் ஹேக்கல் அதுபோன்ற எந்த சடங்கும் இருந்திருக்கவில்லை என்று மறுக்கின்றார்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 673 – லாஹூரிலுள்ள குதுப் கானாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இது ஒரு சம்பவமாகும்.

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

பின்னர் போரில் ஹஸ்ரத் ஸாரிஆ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் குரலைக் கேட்ட சம்பவம் உள்ளது. இது முன்னரும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. துஆ ஒப்புக் கொள்ளப்பட்ட சம்பவம் என்ற அடிப்படையில் அந்த சம்பவத்தை இங்கும் எடுத்துரைத்து விடுகின்றேன். இது அல்லாஹ்வின் ஒரு சிறப்பான நடைமுறையாக இருந்தது.

தப்ரி வரலாற்று நூலில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ஸாரிஆ பின் சுனீம் அவர்களை ஃபஸா மற்றும் தாரா தஜ்ரத் பகுதிகளை நோக்கி அனுப்பினார்கள். அன்னார் அங்கு சென்றடைந்து மக்களை முற்றுகையிட்டார்கள். அப்போது அன்னார் தனது உதவிக்காக தமது ஆதரவாளர்களை அழைத்தார்கள். எதிர்தரப்பு மக்கள் முஸ்லிம் படைகளை எதிர்கொள்வதற்காக பாலைவனத்தில் ஒன்றுகூடி விட்டார்கள். அவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விட்டபோது அவர்கள் எல்லா புறமிருந்தும் முஸ்லிம்களை சுற்றி வளைத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஜுமுஆ நாளன்று குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது يَاسَارِيَةُ ابنُ زُنَيم اَلْجَبَلَ اَلْجَبَلَ ஸாரிஆ பின் ஸுனைனே! மலை! மலை! என்று கூறினார்கள்.

முஸ்லிம் படை எங்கு தங்கியிருந்ததோ அதற்கு அருகிலேயே ஒரு மலை இருந்தது. அதில் முஸ்லிம்கள் அடைக்கலம் பெற்றுக் கொண்டால் பின்னர் எதிரி ஒரு பக்கத்திலிருந்து மட்டுமே தாக்குதல் தொடுக்க முடியும். எனவே அவர்கள் மலையை நோக்கி சென்று பாதுகாப்பு பெற்றுக் கொண்டனர். அதன் பிறகு அவர்கள் போர் செய்தனர். எதிரியை தோற்கடித்தனர். மேலும் ஏராளமான போர்ச் செல்வங்களை பெற்றனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 553, 554 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: சஹாபிகள் மூலமாக அதுபோன்ற ஏராளமான அசாதாரண சம்பவங்கள் நிரூபணமாகியுள்ளன.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதீ 4, ரூஹானீ கஸாயின் தொகுதீ 1 பக்கம் 654, அடிக்குறிப்பு எண் 4)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முழுமையான மேற்கோளை கடந்த குத்பாவில் நான் எடுத்துரைத்து விட்டேன்.

எனவே நைல் நதியை தொடரச் செய்வதற்கான சம்பவத்தை நாம் பார்க்கின்றோம். அது உண்மையான சம்பவமாகவே இருக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் சில வரலாற்று ஆசிரியர்கள் அதனை உண்மை என ஒப்புக் கொள்வதில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தொப்பியின் பரக்கத் மற்றும் ரோமானிய பேரரசர் பற்றிய ஒரு குறிப்பும் கிடைக்கின்றது. இதனை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு முறை கைஸர் பேரரசனுக்கு கடுமையான தலை வலி ஏற்பட்டது. எல்லா வகையான சிகிச்சை செய்த பிறகும் அவருக்கு சுகம் கிடைக்கவில்லை. நீங்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு உங்களது நிலையை எழுதி அனுப்பி விடுங்கள். மேலும் அன்னாரிடமிருந்து அருளுக்காக ஏதாவது ஒரு பொருளை வேண்டுங்கள். அவ்வாறு செய்தால் அன்னார் உங்களுக்காகவும் துஆ செய்வார்கள். அருளுக்குரிய பொருளையும் அனுப்புவார்கள். அன்னாரின் துஆவின் மூலமாக நிச்சயம் உங்களுக்கு குணம் கிடைக்கும் என்று ஒருவர் அவரிடம் கூறினார்.

எனவே அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தனது தூதுவரை அனுப்பினார். இவர்கள் ஆணவம் கொண்ட மக்கள் ஆவர். என்னிடம் அவர் எங்கே வரப் போகின்றார். தற்போது இவர் துன்பத்தில் ஆழ்ந்துள்ளார். எனவே தனது தூதுவரை என்னிடம் அனுப்பி இருக்கின்றார். நான் அவருக்கு ஏதாவதொரு அருளுக்குரிய பொருளை அனுப்பினால் அதை அவர் ஏளனமாக கருதி பயன்படுத்தாமல் இருக்கக் கூடும். எனவே அருளுக்குரிய பொருளாக இருந்து பயன்படுகின்ற, அவருடைய ஆணவத்தை உடைக்கக் கூடிய பொருள் ஒன்றை அவருக்கு அனுப்ப வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எண்ணினார்கள்.

எனவே அன்னார் தனது ஒரு பழைய தொப்பியை அனுப்பி வைத்தார்கள். அதில் பல்வேறு இடங்களில் கறை படிந்திருந்தது. மேலும் அழுக்கின் காரணமாக அது கருப்பாக ஆகி இருந்தது. அதனை அருளுக்குரிய பொருளாக அனுப்பி வைத்தார்கள். அந்த தொப்பியை அவர் பார்த்ததும் அது அவருக்கு மிகவும் தீயதாக தோன்றியது. எனவே அவர் அந்த தொப்பியை அணியவில்லை. ஆனால் உமக்கு தற்போது முஹம்மது (ஸல்) அவர்களின் மூலமாகவே அருள் கிடைக்க முடியும் என்பதை அல்லாஹ் அவருக்கு எடுத்துரைக்க விரும்பி இருந்தான். எனவே அவருக்கு எந்த அளவிற்கு கடுமையான தலைவலி ஏற்பட்டது என்றால் அவர் அந்த தொப்பியை கொண்டு வரும்படி தனது வேலைக்காரரிடம் கூறினார். தனது தலையில் வைப்பதற்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அனுப்பி இருந்த அந்த தொப்பியை கொண்டு வரும்படி அவன் கூறினான். அவனது தலை வலி நீங்கியது. அவருக்கு ஒவ்வொரு 8வது, 9 வது நாளில் தலை வலி ஏற்பட்டு வந்தது. எனவே அவன் அரசவையில் அமரும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அழுக்கான, கிழிந்த அந்த தொப்பியை தனது தலையில் வைப்பது அவனது வாடிக்கையாக ஆனது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் அவருக்கு இந்த அடையாளத்தை காட்டினான். இதில் இன்னொரு விஷயமும் மறைந்துள்ளது. அது இதுவாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு சஹாபி கைஸரிடம் கைதியாக இருந்தார். அவருக்கு பன்றி இறைச்சியை உண்ணக் கொடுக்கும்படி அவன் கட்டளையிட்டிருந்தான். ஆனால் அந்த சஹாபியோ பட்டினியை தாங்கிக் கொள்வார். ஆனால் பன்றிக்கு அருகில் கூட செல்ல மாட்டார். நிர்பந்தத்திற்கு உள்ளான நிலையில் பன்றி இறைச்சியை உண்பது ஆகுமானது என்று இஸ்லாம் கூறியுள்ளது தான். ஆனால் நான் சஹாபி ஆவேன். என்னால் அவ்வாறு செய்ய முடியாது என்று அன்னார் கூறி வந்தார்கள். எனவே பல நாட்கள் பட்டினிக்குப் பிறகு அன்னார் மரணிக்க நேர்ந்தபோது அப்போது கைஸர் அவருக்கு ரொட்டி வழங்கி விடுவான். பின்னர் அந்த சஹாபிக்கு சிறிது ஆற்றல் வந்து விடும்பொழுது அவருக்கு பன்றி இறைச்சியை கொடுக்கும்படி கூறி வந்தான். இவ்வாறு அவரை மரணிக்கவும் விடவில்லை. உயிருடன் வாழவும் விடவில்லை. எனவே நீர் இந்த முஸ்லிமை கைது செய்து வைத்துள்ளாய். எனவே தான் உமக்கு இந்த தலை வலி ஏற்பட்டுள்ளது என்று ஒருவர் கூறினார். இப்போது இதற்குரிய சிகிச்சை என்னவென்றால், நீர் உமர் (ரலி) அவர்களிடம் உமக்காக துஆ செய்யும்படி விண்ணப்பிக்க வேண்டும். மேலும் அன்னாரிடமிருந்து அருளுக்குரிய பொருள் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு தொப்பியை அனுப்பி வைத்தார்கள். அதன் மூலமாக அந்த வலியில் குறைவு ஏற்பட்டது. எனவே அதன் விளைவாக அவர் எந்த அளவிற்கு தாக்கத்திற்கு உள்ளானார் என்றால் அவர் அந்த சஹாபியை விடுதலை செய்து விட்டார்.

இப்போது பாருங்கள்! ஒரு சஹாபிக்கு கைஸர் துன்பம் கொடுக்கின்றார். அல்லாஹ் அவருக்கு தண்டனையாக அவருக்கு தலை வழியை கொடுக்கின்றான். ஒரு நபர் அவருக்கு இவ்வாறு ஆலோசனை கொடுக்கின்றார். அதாவது உமர் அவர்களிடமிருந்து அருளுக்குரிய பொருள் ஒன்றை பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் அன்னாரிடம் துஆவிற்காக விண்ணப்பம் செய்யுங்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அந்த அருளுக்குரிய பொருளை அனுப்புகின்றார்கள். அதன் மூலம் கைஸருடைய தலை வலியும் நீங்கி விடுகின்றது. ஆக இவ்வாறு அல்லாஹ் அந்த சஹாபியின் விடுதலைக்கான ஏற்பாட்டையும் செய்து விடுகின்றான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்களின் உண்மைத்துவத்தையும் அவருக்கு வெளிப்படுத்தி விடுகின்றான்.

(ஸேரே ரூஹானீ(4), அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 536, 537)

தஃப்ஸீர் ராஸியில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. தனக்கு தீராத தலை வலி இருப்பதாக கைஸர், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார். மேலும் தனக்காக ஏதாவது மருந்தை அனுப்புங்கள் என்றும் எழுதினார். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு ஒரு தொப்பியை அனுப்பினார்கள். அவர் அந்த தொப்பியை தலையில் வைத்தபோது அவரது தலை வலி நின்று விட்டது. தலையிலிருந்து அந்த தொப்பியை கழற்றிய உடனேயே அவருக்கு மீண்டும் தலை வலி ஏற்பட்டு வந்தது. எனவே இந்த விஷயத்தால் அவர் ஆச்சரியம் அடைந்தார். அவர் தொப்பியை ஆய்வு செய்து பார்த்தார். அதற்குள் ஒரு காகிதம் இருந்தது. அதில் பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்று எழுதப்பட்டிருந்தது. இந்த குறிப்பு தஃப்ஸீர் ராஸியில் கிடைக்கின்றது.

(இமாம் ராஸி அவர்களின் தஃப்ஸீரே கபீர் என்ற நூல் தொகுதி 1 பக்கம் 143 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மேலும் சில துஆக்கள். அம்ர் பின் மைமூன் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

اَللّٰهُمَّ تَوَفَّنِيْ مَعَ الْاَبْرَارِ وَلَا تُخَلِّفْنِيْ فِي الْاَشْرَارِ
وَقِنِيْ عَذَابَ النَّارِ وَاَلْحِقْنِيْ بِالْاَخْيَارِ

அல்லாஹ்வே! என்னை நல்லடியார்களுடன் மரணிக்கச் செய்வாயாக. தீய மக்களுக்கு பின்னால் என்னை விட்டு விடாதே. என்னை

நெருப்பின் தண்டனையிலிருந்து பாதுகாப்பாயாக. என்னை நன் மக்களுடன் சேர்த்து விடுவாயாக என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் துஆ செய்து வந்தார்கள்.

(அத்தப்கத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 177 – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

யஹ்யா பின் சயீத் பின் முஸய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மனாவிலிருந்து திரும்பி வந்தபோது தனது ஒட்டகத்தை அப்தஹ் என்ற இடத்தில் அமர்த்தினார்கள். மேலும் பத்ஹா பள்ளத்தாக்கிலிருந்த கற்களைக் கொண்டு ஒரு குவியலை உருவாக்கினார்கள். அதில் தனது போர்வையின் ஒரு முனையை விரித்து சுற்றிக் கொண்டார்கள். மேலும் தனது கரத்தை வானத்தை நோக்கி உயர்த்தி இவ்வாறு துஆ செய்தார்கள்.

اَللّٰهُمَّ كَبُرَتْ سِنِّيْ وَضَعُفَتْ قُوَّتِيْ
وَانْتَشَرَتْ رَعِيَّتِيْ فَاقْبِضْنِيْ
اِلَيْكَ غَيْرَ مُضَيِّعٍ وَلَا مُفَرِّطٍ

அல்லாஹ்வே! எனது வயது அதிகமாகி விட்டது. எனது ஆற்றல் குறைந்து விட்டது. எனது ஆட்சி பரவி விட்டது. எனவே நீ என்னை வீணாக்கி விடாமலும், எனக்கு நன்மையை குறைத்து விடாமலும் மரணத்தை வழங்கி விடுவாயாக. எனவே அப்போது துல்ஹஜ்ஜா மாதம் முடிந்திருக்கவில்லை. அதற்குள் அன்னார் மீது தாக்குதல் நடந்தது. அன்னார் ஷஹீதாகி விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 237 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். வறட்சி நாட்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு புதிய பணியை செய்தார்கள். அதை அதற்கு முன் அவர்கள் செய்திருக்கவில்லை. அந்த புதிய பணி இதுவாகும். அதாவது மக்களுக்கு இஷா தொழுகையை நடத்தி விட்டு அன்னார் தனது வீட்டிற்குள் சென்று விட்டார்கள். இரவின் கடைசி பகுதி வரை தொடர்ந்து தொழுது கொண்டிருந்தார்கள். பின்னர் அன்னார் வெளியேறினார்கள். மதீனாவின் நாலா புறமும் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தார்கள். ஓர் இரவில் சஹரி நேரத்தில் அன்னார் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன்.

اَللّٰهُمَّ لَا تَجْعَلْ هَلَاكَ اُمَّةِ مُحَمَّدٍ عَلٰى يَدَيَّ

அல்லாஹ்வே! எனது கரங்களால் முஹம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தை அழிவிற்கு உள்ளாக்கி விடாதே.

(அத்தப்கத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 237 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதன் தனது இறைவனுக்காக மட்டுமே கலப்படமற்ற முறையில் இறைவணக்கம் செய்ய வேண்டும். அதன் பிறகு படைப்பினம் அவரை தீயவராகவோ, நல்லவராகவோ கருதினாலும் சரியே. அதனை அவர் பொருட்படுத்தக் கூடாது. தமது புறத்தை வேண்டுமென்றே தீயதாக ஆக்கிக் கொள்வது ஆகுமற்றது என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த இந்த துஆவிலிருந்து நிரூபணமாகின்றது. அந்த துஆவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கற்றுக் கொடுத்திருந்தார்கள். அந்த துஆ இதுவாகும்.

اَللّٰهُمَّ اجْعَلْ سَرِيْرَتِيْ خَيْرًا مِّنْ عَلَانِيَتِيْ
وَاجْعَلْ عَلَانِيَتِيْ صَالِحَةً

அல்லாஹ்வே! எனது அகத்தை புறத்தை விட சிறந்ததாக ஆக்குவாயாக. எனது புறத்தை அழகாக ஆக்குவாயாக.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 482)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஸ்ஜிது நபவி மற்றும் தொழுகைகளின் மாண்புகளை கருத்தில் கொண்டார்கள். இது தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் சாயிப் பின் யஸீத் அவர்கள் அறிவிக்கின்றார்கள். நான் பள்ளிவாசலில் நின்று கொண்டிருந்தேன். அப்போது ஒரு நபர் என் மீது கூழாங் கற்களை வீசினார். நான் அவரின் பக்கம் பார்த்தபோது அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்பதை கண்டேன். சென்று அந்த இருவரையும் என்னிடம் அழைத்து வாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். அந்த இரு நபர்களும் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தனர். நான் அவர்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு வந்தேன். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நீங்கள் இருவரும் யார்? என்றோ அல்லது நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்? என்றோ அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் நாங்கள் தாயிஃப் நகரத்தின் குடிமக்கள் ஆவோம் என்று கூறினர். நீங்கள் இந்த நகரத்தின் குடிமக்களாக இருந்திருந்தால் நான் உங்களுக்கு தண்டனை வழங்கி இருப்பேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பள்ளிவாசலில் நீங்கள் உங்களது குரலை உயர்த்துகின்றீர்களா? என்றும் கேட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸலாத்... ஹதீஸ் எண் 470)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நடைமுறை இவ்வாறு இருந்தது. அதாவது சஃப்(வரிசை)கள் நேராக இருக்காத வரை அன்னார் தொழுகையில் அல்லாஹு அக்பர் என்று கூற மாட்டார்கள். இன்னும் கூறப்போனால் சஃப்(வரிசை)களை நேராக்குவதற்காக ஒரு நபரை அன்னார் நியமித்திருந்தார்கள். அபூ உஸ்மான் நஹ்தி கூறினான்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை பார்த்தேன். தொழுகைக்காக இகாமத் கூறப்படும்போது அன்னார் கிப்லாவின் பக்கம் முதுகை திருப்பி அதாவது மக்களை நோக்கி தனது முகத்தை வைத்து இவ்வாறு கூறி வந்தார்கள். இன்ன நபரே! முன்னால் வாருங்கள். இன்ன நபரே! பின்னால் சொல்லுங்கள் என்று கூறி வந்தார்கள். அதாவது சஃப்களை நேராக்கி வந்தார்கள். நீங்கள் உங்களது சஃப்களை நேராக வைத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறி வந்தார்கள். சஃப்கள் நேரான பிறகு அன்னார் (ரலி) கிப்லாவை நோக்கி முகம் திருப்பி அல்லாஹு அக்பர் என்று கூறுவார்கள்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 165)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பொருள் தியாகம் மற்றும் அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வது தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகின்றது. இன்னும் ஏராளமான அறிவிப்புகள் இருக்கின்றன. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கைபரில் சில நிலங்களை பெற்றார்கள். அது தொடர்பாக ஆலோசனை செய்வதற்காக அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கைபரில் நிலம் எனக்கு கிடைத்துள்ளது. என்னைப் பொறுத்தவரை இதை விட சிறந்த சொத்து எனக்கு கிடைக்கவில்லை. தாங்கள் இது தொடர்பாக எனக்கு என்ன ஆலோசனை வழங்குகின்றீர்கள்? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் விரும்பினால் அசல் நிலத்தை வக்ஃப் செய்து விடுங்கள். அதிலிருந்து வரும் வருமானத்தை ஏழைகளுக்காக செலவிடுங்கள்.

நாஃபி அவர்கள் கூறி வந்தார்கள்: பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த நிலத்தை சதகாவாக கொடுத்து விட்டார்கள். அதனை விற்பனை செய்யக் கூடாது. மேலும் எவருக்கு அன்பளிப்பாக வழங்கப்படக் கூடாது. மேலும் அதே போன்று வாரிசுகளுக்கும் பங்கிடப்படக் கூடாது என்ற நிபந்தனையில் அதனை தர்மமாக கொடுத்து விட்டார்கள். மேலும் அன்னார் அந்த நிலத்தை ஏழைகளுக்காகவும், உறவினர்களுக்காகவும், அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும், அல்லாஹ்வின் வழியிலும் மற்றும் பயணிகள் மற்றும் விருந்தினர்களுக்காகவும் அதனை வக்ஃப் செய்து விட்டார்கள். நிலத்தின் பாதுகாவலராக இருப்பவருக்கு அதன் வருமானத்திலிருந்து சட்டத்திற்கேற்ப சுயமே உண்பதற்கும், உண்ணக் கொடுப்பதற்கும் எந்தத் தடையும் இல்லை. ஆனால் செல்வத்தை சேமிப்பவராக அவர் இருக்கக் கூடாது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுஷ் ஷரூத் ஹதீஸ் எண் 2737)

சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தியாகம் செய்வதில் முன்னேறுவதற்கு முயற்சி செய்தார்கள். இப்படியும் ஒரு சந்தர்ப்பம் வந்தது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பொருள் தியாகம் செய்யுமாறு கூறியபோது தமது பாதி செல்வத்தை எடுத்துக் கொண்டு அன்னார் (ரலி) வந்து விட்டார்கள்.

முன்னரும் இந்த சம்பவம் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. ஆனால் அன்னாரின் இறையச்சத்தின் நிலை என்னவாக இருந்ததென்றால் அன்னார் மரணத் தருவாயில் அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது. நான் எந்தவொரு அருட்கொடைக்கும் தகுதி படைத்தவன் அல்லன். தண்டனையிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்று மட்டுமே நான் விரும்புகின்றேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 10 பக்கம் 24)

இதுவே அன்னாரின் இறையச்சத்தின் நிலையாக இருந்தது. எவ்வாறிருப்பினும் இன்னும் சில விஷயங்கள் உள்ளன. அவை எதிர்வரும் நாட்களிலும் இன்ஷா அல்லாஹ் எடுத்துரைக்கப்படும்.

(தமிழாக்கம்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 26 நவம்பர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **26 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபையில் அறிவு படைத்தவர்கள் அதிலும் குறிப்பாக திருக்குர்ஆன் மனனம் செய்தவர்களுக்கு சிறப்பான அந்தஸ்து இருந்தது. அவர்கள் சிறிய வயதுடைய இளைஞர்களாகவோ அல்லது குழந்தைகளாகவோ அல்லது பெரியவர்களாகவோ இருந்தாலும் சரியே. புகாரியில் ஓர் அறிவிப்பு வந்துள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உயைனா பின்த் ஹிஸ்ம் பின் ஹுஃசைஃபா மதீனாவிற்கு வந்தார்கள். மேலும் தனது அண்ணன் மகனான ஜூர் பின் கைஸிடம் சென்று தங்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சபையில் தமக்கு நெருக்கமாக அமர்த்தி இருந்த மக்களில் ஹுர் பின் கைஸ் ஒருவராக இருந்தார். அவர் காரியாக (திருக்குர்ஆன் ஓதுவாராக) இருந்தார். அதாவது சபையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு நெருக்கமாக அமரக் கூடியவர்களாகவும் திருக்குர்ஆன் அறிஞர்களே இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஆலோசனை வழங்கக் கூடியவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் வயதுடையவர்களாக இருந்தாலும் சரி அல்லது இளைஞர்களாக இருந்தாலும் சரியே!

உயைனா தனது மருமகனிடம் கூறினார்: எனது அண்ணன் மகனே! இந்த அமீரிடத்தில் உமக்கு செல்வாக்கு உள்ளது. எனவே எனக்காக அன்னாரிடத்தில் வருவதற்கு அனுமதி வேண்டுவீராக. அதற்கு அன்னாரிடத்தில் வருவதற்கு நான் உங்களுக்காக அனுமதி பெற்று விடுவேன் என்று ஹுர் பின் கைஸ் கூறினார்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: எனவே ஹுர் அவர்கள் உயைனாவுக்காக அனுமதி வேண்டினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் அவருக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். உயைனா அன்னாரிடத்தில் வந்தபோது கத்தாபின் மகனே! இது என்ன விஷயம்? என்று கேட்டார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! தாங்கள் எங்களுக்கு அதிக செல்வமும் தருவதில்லை. மேலும் எங்களுக்கு மத்தியிலும், எங்களது செல்வங்களுக்கு மத்தியிலும் நீதியுடன் தீர்ப்பு வழங்குவதும் இல்லை. இதைக்கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கோபமுற்றார்கள். எந்த அளவுக்கென்றால் ஹுர்ரை நோக்கி ஏதோ கூற இருந்தார்கள். அதற்குள் ஹுர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அமீருல் மூமினீன் அவர்களே! அல்லாஹ் தனது இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجَاهِلِيْنَ என்று கூறினார். அதாவது நபியே! எப்போதும் மன்னிப்பை மேற்கொள்வாயாக. நன்மையை ஏவுவீராக. அறிவீனர்களை விட்டு விலகி நிற்பீராக என்ற திருக்குர்ஆன் வசனத்தை அவர் ஓதினார்.

உயைனா அறிவீனர்களைச் சார்ந்தவாக உள்ளார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஹுர் இந்த வசனத்தை அன்னாருக்கு முன்பு ஓதியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். எதுவும் கூறவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இறை வசனத்தை செவிமடுத்து நின்று விடுவார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர், சூரா அஹ்ராஃப்.. ஹதீஸ் எண் 4642)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபையின் ஒரு சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சபையில் ஓர் அமீர் வந்தார். அங்கு பத்து வயதுடைய ஒரு சிறுவனும் மிக உயர்ந்த அவையில் அமர்ந்திருந்தார். அதை அவர் வெறுத்தார். இதுபோன்ற மேன்மையான அவையில் சிறுவர்களுக்கு என்ன வேலை? என்று அவர் எண்ணினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த அமீருடைய ஏதோவொரு செயலின் மீது அதிருப்தி அடைந்தார்கள். காவலரை அழைத்தார்கள். அப்போது அந்த சிறுவர் وَالْكَاظِمِيْنَ الْغَيْظَ என்பதை தொடர்ந்து وَاَعْرِضْ عَنِ الْجَاهِلِيْنَ என்று ஓதினார். பின்னர் هٰذَا مِنَ الْجَاهِلِيْنَ என்று ஓதினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் முகம் சிவந்து விட்டது. பின்னர் மௌனமாகி விட்டார்கள். அந்த நேரத்தில் அவரின் சகோதரர் அதாவது பேசிக் கொண்டிருந்த அந்த நபரின் சகோதரர் கூறினார்: பார்த்தீரா?. நீர் யாரை ஏளனமாக கருதி இருந்தீரோ அதே சிறுவன் தான் உம்மை காப்பாற்றி உள்ளார். (ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 2 பக்கம் 122)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பிள்ளைகளுக்கு எவ்வாறு தர்பிய்யத் வழங்கி வந்தார்கள்? இது தொடர்பாக ஓர் அறிவிப்பு வருகின்றது. யூசுஃப் பின் யஃகூப் கூறினார்கள்:

நானும் எனது சகோதரரும், எனது சிறிய தந்தையின் மகனும் சிறு பிள்ளைகளாக இருந்தபோது யூசுஃப் பின் யஃகூப் கூறினார். நீங்கள் உங்களை சிறு பிள்ளைகளாக இருப்பதன் காரணத்தால் உங்களை ஏளனமாக கருத வேண்டாம். ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஏதாவதொரு விவகாரம் வந்தால் அன்னார் சிறுவர்களை அழைப்பார்கள். மேலும் அவர்களிடமும் ஆலோசனை கேட்பார்கள். அவர்களின் அறிவை கூர்மையாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த ஆலோசனை செய்து வந்தார்கள்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 165)

உஹது போரில் போரின் நிலைமை மாறியது. மேலும் முஸ்லிம்களுக்கு கடுமையான நஷ்டத்தை சகிக்க நேரிட்டது. அப்போது அபூசுஃப்யான் மூன்று முறை இவ்வாறு விழித்துக் கூறினான். இங்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தன்மானத்திற்கான கேள்வி எழுந்தது. அவர்களில் முஹம்மது (ஸல்) உயிருடன் இருக்கின்றாரா? என்று கேட்டான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு பதிலளிப்பதிலிருந்து தடுத்து விட்டார்கள். பின்னர் அவன் மூன்று முறை விழித்து கேட்டான். அவர்களில் அபூகஹாஃபாவின் மகன் உயிருடன் இருக்கின்றாரா? என்று கேட்டான். பின்னர் அவர்களில் இப்னு கத்தாப் உயிருடன் இருக்கின்றாரா? என்று மூன்று முறை கேட்டான். பின்னர் அவன் தனது தோழர்களின் பக்கம் திரும்பி விட்டான். நான் கூறிய நபர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர் என்று கூறினான். இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களால் தம்மை கட்டுப்பாட்டில் வைக்க முடியவில்லை. அல்லாஹ்வின் எதிரியே! இறைவன் மீது ஆணையாக! நீ பொய் பேசியுள்ளாய். நீ யாருடைய பெயரையெல்லாம் எடுத்தாயோ அவர்கள் அனைவரும் உயிருடன் உள்ளனர். இன்னும் அவர்களில் உமக்கு நிறைய விஷயங்கள் எஞ்சியிருக்கின்றன என்று கூறினார்கள். அதற்கு அபூசுஃப்யான் கூறினான்: இது பத்ர் போருக்கான பதிலடியாகும். போர் என்பது முரசைப் போன்றதாகும். சில முறை ஒருவருக்கும், சில முறை மற்றவருக்கும் அது (சாதகமாக) இருக்கும்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாத்... ஹதீஸ் எண் 3039)

அடுத்து பைத்துல் மால் செல்வங்களின் பாதுகாப்பு மற்றும் மேற்பார்வையில் எந்த அளவிற்கு அன்னார் (ரலி) எச்சரிக்கையாக இருந்தார்கள் என்பது தொடர்பாக அறிவிப்பு வருகின்றது. ஸைத் பின் அஸ்லம் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு முறை பால் அருந்தினார்கள். அது அன்னாருக்கு பிடித்திருந்தது. ஒருவர் குவளையில் பால் கொடுத்தார். அன்னார் (ரலி) அதனை குடித்தார்கள். மேலும் அது மிகவும் பிடித்திருந்தது. அன்னாருக்கு பாலை அருந்த கொடுத்த அந்த நபரிடம் இந்தப் பால் எங்கிருந்து வந்தது? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். அதற்கு அவர், நான் ஒரு நிரூற்றிற்கு சென்றேன் என்று கூறி அதன் பெயரையும் குறிப்பிட்டார். அங்கு ஸக்காத்தின் ஒட்டகங்களுக்கு மக்கள் தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்தனர். அவர்கள் எனக்காக அதன் பாலை கறந்தார்கள். அதனை நான் என்னிடமிருந்த தண்ணீர் அருந்தக் கூடிய பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டேன் என்று அவர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது கையை வாயில் போட்டு வாந்தி எடுத்து அதனை வெளியேற்றி விட்டார்கள். இது ஸக்காத் செல்வமாகும். இதனை நான் அருந்த மாட்டேன் என்று கூறினார்கள். (மோதா இமாம் மாலிக், கிதாபுஸ் ஸகாத்.... ஹதீஸ் எண் 31)

பரா பின் மஃரூரின் மகன் அறிவிக்கின்றார்கள்: ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். எந்த அளவுக்கென்றால் அன்னார் சொற்பொழிவு மேடைக்கு வந்தார்கள். அப்போது அன்னார் நோயுற்றிருந்தார்கள். அன்னாரின் அந்த நோய்க்கு மருந்தாக தேன் எடுத்துக் கொள்ளும்படி கூறப்பட்டிருந்தது. பைத்துல் மால் தேனின் பாத்திரம் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீங்கள் எனக்கு அனுமதி கொடுத்தால் நான் அதனை எடுத்துக் கொள்கின்றேன். இல்லையென்றால் இது எனக்கு ஹராமாகும்.

அப்போது மக்கள் அன்னாருக்கு அதற்கு அனுமதி கொடுத்து விட்டார்கள்.

(அத்தபகத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 147 திக்ர் இஸ்திஹ்லாஃப் உமர்– 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

பைத்துல் மாலின் செல்வங்களின் பாதுகாப்பில் அன்னாருக்கு எந்த அளவிற்கு கவனம் இருந்தது என்பது குறித்து ஒரு சம்பவம் உள்ளது. அதனை இதற்கு முன்பும் எடுத்துரைத்துள்ளேன். சுருக்கமாக கூறி விடுகின்றேன். ஒரு மதிய வேளையில் மிகக் கடுமையான வெப்பத்தில் பின் தங்கி விட்ட இரண்டு ஒட்டகங்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதன் மேயும் இடத்திற்கு கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். அவை இங்கும் அங்கும் சென்று தொலைந்து விடாமல் இருப்பதற்காக மேய்ச்சல் நிலத்திற்கு அதனைக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். தற்செயலாக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அதனை பார்த்தபோது இந்தப் பணியை நாங்கள் செய்து கொள்கின்றோம். தாங்கள் நிழலில் வந்து விடுங்கள் என்று கூறினார்கள். அதற்கு நீங்கள் நிழலில் சென்று அமைதியாக அமர்ந்து விடுங்கள். இது எனது பணியாகும். இதை நானே செய்து கொள்வேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்திஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 667 உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்: அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப முஸ்லிம்களுக்கு செல்வத்தை வழங்கினான். கண்ணியத்தை வழங்கினான். அந்தஸ்தை வழங்கினான். அவர்கள் இஸ்லாத்திலிருந்து கவனமற்றவர்களாக இருக்கவில்லை.

தொடர்ந்து அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: உங்களில் எவரும் தமது மார்க்கத்திலிருந்து கவனமற்றவராக இருக்க வேண்டாம். இஸ்லாத்தின் போதனைகளிலிருந்து கவனமற்றவராக ஆக வேண்டாம். தமது பொறுப்புகளிலிருந்தும் கவனமற்றவராக ஆக வேண்டாம்.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு முறை வெளியில் குவிமாடத்தில் அமர்ந்திருந்தேன். எந்த அளவிற்கு கடுமையான வெப்பம் இருந்ததென்றால் கதவை திறப்பதற்கு கூட தைரியம் வரவில்லை. இதற்குள் எனது அடிமை என்னிடம் கூறினார். பாருங்கள்! கடுமையான வெப்பத்தில் வெளியில் ஒரு நபர் சுற்றிக் கொண்டிருக்கின்றார். சிறிது நேரமே கழிந்திருந்தது. அந்த நபர் எனது குவிமாடத்திற்கு அருகில் வந்து விட்டார். நான் பார்த்தபோது அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களாக இருந்தார்கள். அன்னாரை பார்த்தவுடன் நான் பதற்றமடைந்து வெளியில் வந்தேன். இந்த வெப்பத்தில் தாங்கள் எங்கே செல்கின்றீர்கள்? என்று நான் கேட்டேன். அதற்கு பைத்துல் மாலுக்கு சொந்தமான ஓர் ஒட்டகம் தொலைந்து விட்டது. அதனை தேடிக் கொண்டு நான் வெளியில் சுற்றி வருகின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்ந்து எழுதுகின்றார்கள்:

عَلَى الْاَرَآئِكِ يَنْظُرُوْنَ அவர்கள் மஞ்சங்களில் இருப்பார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆயினும் எப்போதும் அவர்களது பணியாக கண்காணிப்பு இருக்கும். உலகத்தின் அருட்கொடைகளும், உலகத்தின் சுகபோகங்களும் அவர்களை சோம்பேறியாக்கி விடாது. அவர்கள் இந்த மஞ்சங்களில் தூங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். மாறாக, விழித்துக் கொண்டும், எச்சரிக்கையாகவும் இருப்பார்கள். மக்களின் உரிமைகளை கண்காணித்து வருவார்கள். மேலும் தங்களது பொறுப்புகளின் கடமைகளை முழுமையாக, அழகிய முறையில் செலுத்திக் கொண்டே செல்வார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி8 பக்கம் 314, 315)

சமத்துவத்தை நிலைநாட்டுவது தொடர்பாக அறிவிப்பில் வருகின்றது. சயீத் பின் முஸய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதரும், ஒரு முஸ்லிமும் சண்டையிட்டவாறு வந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு யூதரின் பக்கம் உண்மை இருப்பதாக தெரிந்தது. எனவே அன்னார் (ரலி) அவருக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கினார்கள். பின்னர் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் உண்மையான தீர்ப்பை வழங்கியுள்ளீர் என்று அந்த யூதர் கூறினார்.

(மோதா இமாம் மாலிக், கிதாபுஸ் கஸ்யா.... ஹதீஸ் எண் 1425 – 2002 ஆம் ஆண்டு தாருல் ஃபிக்ரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எகிப்தைச் சார்ந்த ஒரு நபர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். அவர் கூறினார்: அமீருல் மூமினீன் அவர்களே! நான் அநீதியிலிருந்து தங்களிடம் அடைக்கலம் வேண்டுகின்றேன். அப்போது நீர் சிறந்த அடைக்கலத்தை நாடியுள்ளீர் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். நான் அம்ர் பின் ஆஸ் அவர்களின் மகனுடன் ஓட்டப்பந்தய போட்டி நடத்தினேன். நான் அவரை விட முந்தி விட்டேன். அதனால் அவர் என்னை சாட்டையால் அடிக்க தொடங்கி விட்டார். நான் கண்ணியத்திற்குரிய மனிதரின் மகன் ஆவேன். என்னை விட முந்திச் செல்வதற்கு உமக்கு இந்த தைரியம் எப்படி வந்தது? என்று அவர் தன்னிடம் கூறியதாக அவர் கூறினார்.

இதைக் கேட்ட ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். மேலும் தமது மகனுடன் ஆஜராகும்படி கட்டளை வழங்கினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் வந்தபோது எகிப்தியர் எங்கே? என்று கேட்டார்கள். மேலும் சாட்டையை எடுத்து ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் இந்த மகனை அடியுங்கள் என்று கூறினார்கள். அந்த நபர் அவரை அடித்தார். அப்போது கண்ணியத்திற்குரிய மனிதரின் மகனை அடிப்பீராக என்று அந்த எகிப்திய நபரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர் அவரை அடித்தார். அவரை அடிப்பதை நாங்கள் விரும்பினோம். அவர் தொடர்ந்து சாட்டையால் அடித்துக் கொண்டிருந்தார். எந்த அளவுக்கென்றால் இப்போது அவரை விட்டு விட வேண்டும் என நாங்கள் விரும்பினோம். பின்னர் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களின் தலையில் அடியுங்கள் என்று அந்த எகிப்திய நபரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதற்கு அமீருல் மூமினீன் அவர்களே! அன்னாரின் மகன் என்னை அடித்தார். நான் அதற்கு பழிவாங்கி விட்டேன் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் அந்த மக்களை அவர்களின் தாய்மார்கள் சுதந்திரமாக பெற்றெடுத்திருக்கின்ற போது நீங்கள் எப்போதிருந்து மக்களை அடிமையாக ஆக்கி வைத்துள்ளீர்கள்? என்று கூறினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! எனக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரியாது. மேலும் அந்த எகிப்தியரும் என்னிடம் வரவில்லை என்றும் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால், கிதாபுல் ஃபஸாயில் தொகுதி 7 அறிவிப்பு எண் 36005 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சிறிது செல்வம் வந்தது. மேலும் அன்னார் அதனை மக்களுக்கு பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். அப்போது மக்களின் கூட்டம் கூடியது. ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் மக்களிடம் சண்டையிட்டுக் கொண்டு முந்தி விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை சென்றடைந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவர்களுக்கு ஒரு கசையடி கொடுத்தார்கள். நீங்கள் பூமியில் அல்லாஹ்வின் அரசருக்கு அஞ்சவில்லை. கூட்டத்தை தாண்டிக்கொண்டு முன்னால் வந்து விட்டீர்கள். எனவே அல்லாஹ்வின் அரசரும் உங்களுக்கு ஒருபோதும் அஞ்சுவதில்லை என்பதை கூறி விட நான் எண்ணினேன் என்று கூறினார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 97 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துணிவு எந்த அளவிற்கு இருந்தது? இது குறித்து அறிவிப்பில் வருகின்றது. ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குத்பா கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மக்களே! என்னிடத்தில் உங்களில் எவராவது ஒருவர் கோணல் தன்மையை கண்டால் அவர் அதனை சரி செய்யட்டும் என்று கூறினார்கள். அப்போது ஒரு நபர் எழுந்து நின்றார். மேலும் நாங்கள் உங்களிடத்தில் கோணல் தன்மையை கண்டால் பின்னர் அதனை நாங்கள் எங்களது வாள்களால் நேராக்கி விடுவோம் என்று அவர் கூறினார். அதற்கு நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துகின்றேன். அவன் இந்த சமுதாயத்தில் உமரின் கோணல் தன்மையை தனது வாள்களால் சரியாக்கக் கூடிய நபரையும் படைத்திருக்கின்றான் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 106 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குத்பா வழங்கியவாறு கூறினார்கள்: எனக்கு நன்மைக்கான கட்டளை வழங்கி தீமையிலிருந்து தடுத்து எனக்கு அறிவுரை செய்து எனக்கு உதவி செய்யுங்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 107 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனக்கு எல்லாரையும் விட மிகவும் பிடித்தமான நபர் யாரென்றால் எனது குறைகளை எனக்கு அறிவித்துக் கொடுப்பவர் ஆவார்.

(அத்தபகத்துல் குப்ரா லி இப்னி சஆத் தொகுதி 3 பக்கம் 222 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு கூற்று எடுத்துரைக்கப்படுகின்றது. அதாவது நான் தவறு செய்யும்போது என் மீதான அச்சத்தினால் ஒருவர் அதனை சரியாக வழிநடத்தாமல் இருந்து விடக் கூடாது என நான் அஞ்சுகின்றேன்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 107 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஒரு நாள் அன்னாரிடத்தில் ஒரு நபர் வந்தார். பொது மக்கள் முன்னால் அவர் கூறினார்: உமரே! அல்லாஹ்வுக்கு அஞ்சுவீராக. சில மக்கள் இதைக்கேட்டு விட்டு மிகவும் கோபமுற்றனர். அவரை அமைதிப்படுத்த விரும்பினர். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். **நீர் குறைகளை சுட்டிக் காட்டாவிட்டால் உம்மிடம் எந்த நன்மையும் இல்லை. அந்த குறைகளை செவிமடுக்காவிட்டால் எம்மிடத்தில் எந்த நன்மையும் இல்லை.**

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 107 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

அதாவது நீங்கள் விஷயத்தை மட்டும் கூறாதீர்கள். மாறாக, நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள் என்பதை குறிப்பிட்டுக் கூறுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மக்களுக்கு மத்தியில் குத்பா கொடுப்பதற்காக எழுந்து நின்றார்கள். அன்னார் மக்களே! கேளுங்கள். மேலும் கட்டுப்படுங்கள் என்று கூறிய உடனேயே அன்னாரின் கூற்றை முறித்தவாறு உமரே! நாங்கள் செவிமடுக்கவும் மாட்டோம். கட்டுப்படவும் மாட்டோம் என்று ஒரு நபர் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் அல்லாஹ்வின் அடியாரே! ஏன்? என்று மென்மையாக கேட்டார்கள். அதற்கு அவர் ஏனென்றால் பைத்துல் மாலிலிருந்து பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட ஆடையிலிருந்து மக்களால் மேலாடை மட்டுமே தைத்துக் கொள்ள முடியும். முழுமையான ஜோடியை உருவாக்க முடியாது. தங்களுக்கும் அதே அளவு தான் துணி கிடைத்திருக்கும். பின்னர் தாங்கள் மட்டும் எவ்வாறு ஆடையை உருவாக்கிக் கொண்டீர்கள் என்று கேட்டார். அப்போது நீங்கள் உங்களது இடத்திலேயே இருங்கள் என்று அந்த நபரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் தனது மகன் அப்துல்லாஹ்வை அழைத்தார்கள். நான் எனது தந்தைக்கு எனது பங்கில் வந்த துணியை கொடுத்து விட்டேன். அன்னாரின் ஆடை முழுமையாகி விட வேண்டும் என்பதற்காக நான் அவ்வாறு செய்தேன் என்று அப்துல்லாஹ் கூறினார். இதைக் கேட்ட அனைத்து மக்களும் நிம்மதியடைந்தனர். அமீருல் மூமினீன் அவர்களே! இப்போது நான் செவியேற்றேன். கட்டுப்படுவேன் என்று அந்த நபர் கூறினார்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 107 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

இப்படிப்பட்ட சில மக்களும் இருந்து வந்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து தர்பிய்யத் பெற்ற மக்களின் வாயிலிருந்து ஒருபோதும் இதுபோன்ற கூற்றுகளை நீங்கள் கேட்க முடியாது. இவ்வாறு பேசி வந்த மக்கள் யார் என்றால் அவர்கள் மிக தாமதமாக முஸ்லிமாகி இருந்தனர். அல்லது முற்றிலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், அறிவீனர்களாகவும் இருந்தனர். பெரும் சஹாபிகளில் எவரிடமும் இதுபோன்ற எந்த விஷயமும் காணப்படவில்லை. அவர்களிடம் முழுமையான கட்டுப்படுதல் இருந்து வந்தது.

இஸ்லாம் மார்க்க விவகாரங்களில் சுதந்திரம் வழங்கியுள்ளது. இது தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வழிமுறை என்னவாக இருந்தது. இஸ்கந்தரியா வெற்றிக்குப் பிறகு அங்கிருந்த அரசர் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்கு இந்த தூதுச் செய்தியை அனுப்பினார். அரபு கோத்திரங்களே! உங்களை விட மிகவும் வெறுப்பிற்குரிய சமுதாயங்களுக்கு அதாவது பாரசீகர்கள் மற்றும் ரோமானியர்களுக்கு ஜிஸ்யா கொடுத்து வந்தேன். நீங்கள் விரும்பினால் நான் உங்களுக்கும் ஜிஸ்யா கொடுப்பதற்காக தயாராக இருக்கின்றேன். நிபந்தனை என்னவென்றால், நீங்கள் எனது பகுதியைச் சார்ந்த போர்க் கைதிகளை ஒப்படைத்து விட வேண்டும்.

ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் முழு விவகாரத்தையும் கிலாஃபத் அவைக்கே எழுதினார்கள். அப்போது இஸ்கந்தரியா அரசருக்கு முன்னால் இந்த ஆலோசனையை முன் வையுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள். அதாவது அவர்கள் ஜிஸ்யா செலுத்தட்டும். ஆனால் உங்களிடமுள்ள போர்க் கைதிகள் அதாவது முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் உள்ளவர்களுக்கு அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளட்டும். அல்லது தனது மார்க்கத்தில் உறுதியாக நிலை நிற்கட்டும். எவர் முஸ்லிமாகி விடுவாரோ அவர் முஸ்லிமாக கணக்கிடப்படுவார். அவரது உரிமைகளும், கடமைகளும் மற்றவர்களுக்கு சமமானவையாக இருக்கும். ஆனால் எவர் தனது சமுதாயத்தின் மார்க்கத்தில் நிலை நிற்பாரோ அவர் மீது ஏனைய மார்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அதே ஜிஸ்யா வரியை அவரும் செலுத்துவார். எனவே அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அனைத்து கைதிகளையும் ஒன்றுகூட்டினார்கள். மேலும் அவர்களுக்கு கிலாஃபத்தின் கூற்றுகளை வாசித்துக் காட்டினார்கள். அப்போது ஏராளமான கைதிகள் முஸ்லிமாகி விட்டனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 512, 513 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மார்க்க சுதந்திரத்தில் அன்னாருக்கு எந்த அளவிற்கு எச்சரிக்கை இருந்தது. இது தொடர்பாக ஒரு சம்பவம் வருகின்றது. ஒரு முறை ஒரு வயதான கிறிஸ்தவ பெண்மணி தனது ஏதோ ஒரு தேவைக்காக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்தார். அப்போது அன்னார் அவரிடம் முஸ்லிமாகி விடுங்கள். பாதுகாப்பாக இருப்பீர்கள். அல்லாஹ் முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையுடன் அனுப்பியுள்ளான் என்று கூறினார்கள். அதற்கு அந்தப் பெண்மணி நான் வயதான பெண்மணி ஆவேன். மரணம் எனக்கு அருகில் உள்ளது என்று பதிலளித்தார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவருக்கு உதவி செய்தார்கள். அவரது தேவையை முழுமை செய்தார்கள். ஆனால் அன்னாரின் இந்த உதவி மற்றும் இந்த பணி அவரது தேவையிலிருந்து ஆகுமற்ற பயனடைந்து அவரை முஸ்லிமாகி விடுவதற்கு நிர்பந்தத்திற்குள்ளாக்கி விடக் கூடாது என்று அஞ்சினார்கள். எனவே அன்னார் இந்த செயலுக்காக அல்லாஹ்விடம் தவ்பா செய்தார்கள். அல்லாஹ்வே! நான் அவருக்கு நேரான வழியை காட்டினேன். அவரை நான் கட்டாயப்படுத்தவில்லை என்று கூறினார்கள். மிகவும் எச்சரிக்கையாக இருந்தார்கள்.

(டாக்டர் முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 101 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

அடுத்து ஒரு சம்பவம் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஒரு கிறிஸ்துவ அடிமை இருந்தார். அவரது பெயர் அஷக் ஆகும். அவர் கூறினார்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அடிமையாக இருந்தேன். நீ முஸ்லிமாகி விடு. ஏனென்றால் முஸ்லிம்களின் சில விவகாரங்களில் நான் உன்னிடம் உதவி வாங்கிக் கொள்வேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் என்னிடம் கூறினார்கள். ஏனென்றால் முஸ்லிம் அல்லாதவரிடமிருந்து முஸ்லிம்களின் விவகாரங்களில் உதவி பெறுவது எமக்கு ஆகுமானதல்ல என்று கூறினார்கள். ஆனால் நான் மறுத்து விட்டேன் என்று அந்த அடிமை கூறினார். அப்போது அன்னார் لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ இஸ்லாமிய மார்க்கத்தில் பலவந்தம் இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் நெருங்கியபோது அன்னார் என்னை விடுதலை செய்து விட்டார்கள். உமக்கு எங்கு விருப்பமோ அங்கு சென்று விடு என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(டாக்டர் முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் ஷக்ஸிய்யத் அவ்ர் கார்னாமே என்ற நூல் பக்கம் 184 )

விலங்குகளின் மீது பரிவும், கருணை உள்ளமும் கொண்ட சம்பவம். அஹ்னஃப் பின் கைஸ் அறிவிக்கின்றார்கள். நாங்கள் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் ஒரு குழுவின் வடிவில் மாபெரும் வெற்றியின் நற்செய்தியை எடுத்துக் கொண்டு வந்தோம். நீங்கள் எங்கே தங்கியுள்ளீர்கள்? என்று அன்னார் (ரலி) கேட்டார்கள். இன்ன இடத்தில் தங்கியுள்ளோம் என்று நான் கூறினேன். அப்போது அன்னார் என்னுடன் சென்றார்கள். எங்களது ஒட்டகங்கள் அந்த இடம் வரை வந்தடைந்தார்கள். ஒவ்வொன்றையும் மிகவும் உற்றுநோக்கி பார்த்த பிறகு நீங்கள் உங்களது சவாரிகளை குறித்து அல்லாஹ்விற்கு அஞ்சுவதில்லையா? என்று கேட்டார்கள். மேலும் உங்களுக்கு அவற்றின் மீதும் கடமைகள் உள்ளன என்பது உங்களுக்குத் தெரியாதா? அவற்றிற்கு உணவு ஏதும் கொடுக்காமல் ஏன் விட்டு விட்டீர்கள்? அந்த கால்நடைகள் புற்களை மேய்ந்திருக்குமே என்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 171 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஓர் ஒட்டகத்தை பார்த்தார்கள். அதன் மீது பலவீனம் மற்றும் நோயின் தாக்கம் முற்றிலும் வெளிப்பட்டிருந்தது. சாலிம் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் தனது கையை ஒட்டகத்தின் முதுகின் மீது இருந்த ஒரு காயத்தில் வைத்தார்கள். நான் அஞ்சுகின்றேன். அல்லாஹ்விடத்தில் உன்னைப் பற்றி நான் விசாரிக்கப்பட்டுவிடக் கூடாது என்று நான் அஞ்சுகின்றேன் என்று தம்மை நோக்கி கூறினார்கள்.

(அத்தப்கத்துல் குப்ரா பாப் இஸ்திஹ்லாஃப் உமர் தொகுதி 3 பக்கம் 217 – பைரூத்திலுள்ள தாருல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அஸ்லமிடமிருந்து அடுத்து ஓர் அறிவிப்பு வருகின்றது. அன்னார் அறிவிக்கின்றார்கள். ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் புத்தம் புதிய மீன் உண்பதற்கு எனது உள்ளத்தில் ஆசை உள்ளது என்று கூறினார்கள். யர்ஃபா என்பவர் (இது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அடிமையின் பெயராகும்) சவாரியில் அமர்ந்து முன், பின் நான்கு மைல் தொலைவு வரை சென்று ஒரு சிறந்த மீனை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்தார். பின்னர் தனது கால்நடையை நோக்கி பார்த்தார். அதனை நீராட்டினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் வந்து விட்டார்கள். செல்லுங்கள் என்று அன்னார் கூறினார்கள். மேலும் அந்த கால்நடையின் காதிற்கு கீழே இருக்கின்ற வேர்வையை துடைப்பதற்கு ஏன் மறந்து விட்டீர்? என்று அந்த நபரைப் பார்த்து அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீர் உமரின்

ஆசையை நிறைவேற்றுவதற்காக ஒரு விலங்கை துன்பத்தில் ஆழ்த்தி விட்டீர். அல்லாஹ்வின் மீது ஆணையாக! உமர் உமது இந்த மீனை ஒருபோதும் சுவைக்க மாட்டார் என்று கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் கிதாபுல் ஃபஸாயில் தொகுதி 7 பக்கம் 287 அறிவிப்பு எண் 35966 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் வெப்ப காலத்தில் மதிய வேளையில் ஈராக்கிலிருந்து ஒரு குழு வந்தது. அக்குழுவில் அஹ்னப் பின் கைஸ் அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தலையில் தலைப்பாகையை அணிந்து கொண்டு ஸக்காத் ஒட்டகங்களின் மீது அடையாளமிட்டுக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: அஹ்னஃபே! உங்களது ஆடையை மாற்றி விட்டு வாருங்கள். இந்த ஒட்டகங்களில் அமீருல் மூமினீனிற்கு உதவி செய்யுங்கள். இவை ஸக்காத் ஒட்டகமாகும். இவற்றில் அனாதைகள், விதவைகள் மற்றும் ஏழைகளுக்கான உரிமை உள்ளது.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 3 பக்கம் 303 ஹதீஸ் எண் 14303 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு யூதருக்கு கொடுத்த ஒரு பதில் தொடர்பாக ஓர் அறிவிப்பில் வருகின்றது. தாரீக் அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள். யூதர்களில் ஒரு நபர் அன்னாரிடம் இவ்வாறு கூறினார். அமீருல் மூமினீன் அவர்களே! உங்களது வேதத்தில் ஒரு வசனம் உள்ளது. அதனை தாங்கள் ஓதுகின்றீர்கள். அது எங்கள் மீது அதாவது யூத சமுதாயத்தின் மீது இறங்கி இருந்தால் நாங்கள் அந்த நாளை பெருநாளாக கொண்டாடி இருப்போம்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அது எந்த வசனம்? என்று கேட்டார்கள். அதற்கு

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

என்று கூறினார். அதாவது இன்றைய நாள் நான் உங்களுக்கு உங்களது மார்க்கத்தை முழுமையாக்கி உள்ளேன். மேலும் உங்களுக்கு எனது அருட்கொடைகள் அனைத்தையும் வழங்கியுள்ளேன். மேலும் நான் உங்களுக்காக இஸ்லாத்தை மார்க்கமாக விரும்பியுள்ளேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய இந்த வசனம் எந்த நாளில் இறங்கியது. மேலும் எந்த இடத்தில் இறங்கியது என்பதை நாங்கள் அறிவோம். அன்னார் (ஸல்) அவர்கள் அப்போது ஜுமுஆ நாளில் அரஃபாத் மைதானத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

(ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஈமான் ஹதீஸ் எண் 45)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் ஒரு யூதர் இவ்வாறு கூறினார். திருக்குர்ஆனில் ஒரு வசனம் உள்ளது. அது எங்களது வேதத்தில் இறங்கியிருந்தால் நாங்கள் அந்த நாளை பெருநாளாக கொண்டாடி இருப்போம். அது எந்த நாள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ என்பதாகும் என்று அவர் பதிலளித்தார். அதற்கு அந்த நாள் எங்களுக்கு இரண்டு பெருநாளுக்குரிய நாளாகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அதாவது ஜுமுஆ நாளாகவும் இருந்தது. அரஃபா நாளாகவும் இருந்தது. இந்த வசனம் அந்த நாளிலேயே இறங்கியிருந்தது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 6)

சில சான்றோர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து அறிவிக்கின்றார்கள். அஷ்அஷ் அவர்களிடமிருந்து அறிவிப்பு கிடைக்கின்றது. நான் இமாம் ஷஃபி அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். அன்னார் கூறினார்கள்: மக்கள் ஒரு விவகாரத்தில் கருத்து வேறுபாடு கொண்டால் அந்த விவகாரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் என்ன செய்தார்கள் என்று பாருங்கள். ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை செய்யாமல் எந்தப் பணியையும் செய்திருக்கவில்லை.

(ஹல்யத்துல் அவ்லியா தொகுதி 4 பக்கம் 304, 305 அறிவிப்பு எண் 5841 – 2007 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

இமாம் ஷஃபி அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் கபீஸா பின் ஜாபிர் அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். நான் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுடன் இருந்துள்ளேன். நான் தங்களை விட அல்லாஹ்வின் வேதத்தை அதிகமாக ஓதக் கூடிய மற்றும் அல்லாஹ்வின் மார்க்கத்தை புரியக்கூடிய மனிதரையும், தங்களை விட சிறந்த பாடம் கற்பிப்பவரையும் நான் கண்டதில்லை.

(தாரீக் திமஷ்க் அல்கபீர் லி இப்னீ அஸாகிர் தொகுதி 11 பாகம் 21 பக்கம் 128)

ஹஸ்ரத் ஹஸன் பஸ்ரி (ரஹி) அவர்கள், நீங்கள் உங்களது சபைகளை நறுமணமிக்கதாக ஆக்க விரும்புகின்றீர்கள் என்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அதிகமாக நினைவு கூறுங்கள் என்று கூறினார்கள்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 217)

முஜாஹித் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது: அன்னார் கூறினார்கள்: நிச்சயமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலகட்டத்தில் ஷைத்தான் விலங்கிடப்பட்டிருந்தான். அன்னார் (ரலி) அவர்கள் ஷஹீதானபோது ஷைத்தான்கள் பூமியில் குதிக்கத் தொடங்கி விட்டனர் என்று நாங்கள் எங்களுக்குள் பேசி வந்தோம்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் பக்கம் 217)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் பற்றி வருகின்றது. அன்னாருக்கு கவிதையில் மிகுந்த ஆர்வமும் இருந்தது. சுயமாக எந்த கவிதையும் கூறி வந்ததில்லை. எனினும் கவிதையை கேட்டு வந்தார்கள். அதை விரும்பி வந்தார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் ஒரு பயணத்தில் புறப்பட்டேன். ஓர் இரவில் நாங்கள் சென்று கொண்டிருந்தபோது நான் அன்னாருக்கு அருகில் வந்தேன். அப்போது அன்னார் ஒரு பகுதியில் ஒரு சாட்டையால் அடித்து இந்த கவிதையை படித்தார்கள்.

كَذَبْتُمْ وَبَيْتِ اللهِ يُقْتَلُ أَحْمَدُ
وَلَمَّا نُطَاعِنْ دُونَهُ وَنُنَاضِلُ
وَنُسْلِمُهُ حَتّٰى نُصَرَّعَ حَوْلَهُ
وَنَذْهَلَ عَنْ أَبْنَائِنَا وَالْحَلَائِلِ

நீங்கள் பொய் பேசுகின்றீர்கள். அல்லாஹ்வின் வீடான கஃபாவின் மீது ஆணையாக! நாங்கள் ஹஸ்ரத் அஹ்மது (ஸல்) அவர்களின் பாதுகாப்பிற்காக அம்பு எய்தல் மற்றும் வாள் ஏந்துதலில் எங்களது திறமையை காட்டாத வரை ஹஸ்ரத் அஹ்மது (ஸல்) அவர்கள் ஷஹீதாக முடியாது. மேலும் நாங்கள் அன்னாருக்கு அருகில் போர் செய்தவாறு மரணித்து விடாத வரையிலும் மேலும் எங்களது மகன்களையும், குடும்பத்தினரையும் மறந்து விடாத வரையிலும் நாங்கள் அன்னாரை ஒருபோதும் விட்டு விட மாட்டோம்.

وَمَا حَمَلَتْ مِنْ نَاقَةٍ فَوْقَ رَحْلِهَا
أَبَرَّ وَ أَوْفٰى ذِمَّةً مِنْ مُحَمَّدِ

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை விட அதிகமாக நன்மை செய்யக்கூடிய மற்றும் வாக்குறுதிகளை முழுமை செய்யக்கூடிய வேறு எந்த நபரையும் எந்தவொரு ஒட்டகமும் தனது முதுகில் சுமக்கவில்லை.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 577 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

டாக்டர் அலி முஹம்மது ஸலாபி என்ற ஒரு வரலாற்றாசிரியர் செய்யிதுனா ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் வாழ்க்கை மற்றும் சிறப்புகள் என்ற தமது நூலில் கவிதைகளில் அன்னாருக்கு இருந்த ஈடுபாடு தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்: குலஃபாயே ராஷிதீன்களில் அதாவது நேர்வழி பெற்ற கலீஃபாக்களில் கவிதைகளின் மூலமாக உதாரணம் கொடுக்கக் கூடியவராக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களைக் குறித்து சில மக்கள் இந்த அளவுக்கு எழுதியுள்ளனர். அதாவது அன்னாருக்கு முன்னால் ஒரு விவகாரம் வந்து அது குறித்து அன்னார் கவிதை கூறாத சம்பவங்கள் ஏதாவது அரிதாகத்தான் இருக்கும்.

ஒரு முறை அன்னார் (ரலி) அவர்கள் புதிய ஆடையை அணிந்து வீட்டை விட்டு வெளியேறினார்கள். மக்கள் அன்னாரை மிக கவனத்துடன் பார்க்கத் தொடங்கினர். அப்போது அன்னார் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கு ஒரு உதாரணத்தை கொடுத்து இந்த கவிதையை படித்தார்கள்.

لَمْ تُغْنِ عَنْ هُرْمُزٍ يَوْمًا خَزَائِنُهُ
وَالْخُلْدُ قَدْ حَاوَلَتْ عَادٌ فَمَا خَلَدُوْا
أَيْنَ الْمُلُوكُ الَّتِي كَانَتْ نَوَافِلُهَا
مِنْ كُلِّ أَوْبٍ إِلَيْهَا رَاكِبٌ يَفِدُ

மரண நேரத்தில் ஹுர்முஸிற்கு அவனது கருவூலங்கள் எந்தப் பயனும் அளிக்கவில்லை. ஆது சமுதாயத்தினர் நிரந்தரமாக வசிப்பதற்கு முயற்சி செய்தனர். ஆனால் நிரந்தரமாக வசிக்கவில்லை. நீரூற்றுகளின் எல்லா புறமிருந்தும் வந்த குழுவினரின் அரசர்கள் எங்கே சென்றனர்?

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப், ஷக்ஸிய்யத் அவ்ர் கார்னாமே என்ற நூல் பக்கம் 333)

அலி முஹம்மது ஸலாபி எழுதுகின்றார்கள்: எந்த கவிதைகளில் இஸ்லாமிய வாழ்க்கையின் சிறப்புகள் ஒளிமயமாக இருந்ததோ அந்த கவிதைகளையே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரும்பி வந்தார்கள். மேலும் இஸ்லாமிய சிறப்புகளை வெளிப்படுத்துகின்ற மற்றும் அந்த கவிதைகளின் பொருள்கள் இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராகவும் மற்றும் அதன் கண்ணியத்திற்கு எதிரானதாகவும் இல்லாத கவிதைகளையே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரும்பி வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் சிறந்த கவிதைகளை மனனம் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். கவிதைகளை கற்றுக்

கொள்ளுங்கள். அதில் தேடக்கூடிய சிறப்புகள் உள்ளன. மேலும் நுட்பமான ஞானம் இருக்கின்றது. மேலும் தொலைந்து போன நல்லொழுக்கத்தின் பக்கம் வழிகாட்டப்படுகின்றது. கவிதைகளின் பயன்கள் இந்த அளவோடு நின்று விடுவதில்லை. மாறாக, அதனை உள்ளத்தின் சாவியாகவும், மனித உடலின் நன்மைக்கான தூண்டும் காரணியாகவும் அன்னார் (ரலி) அவர்கள் கருதி இருந்தார்கள். மனிதனின் மிகச் சிறந்த கலை கவிதைகளின் படைப்பாகும். அதனை அவன் தனது தேவைகளின்போது முன் வைக்கின்றான். அதன் மூலம் கண்ணியமிக்க வள்ளல்தன்மை கொண்ட மனிதர்களின் உள்ளத்தை மென்மையாக்கி விடுகின்றான். மோசமான உள்ளம் படைத்த நபரையும் தன் பக்கம் ஈர்த்து விடுகின்றான் என்று கவிதைகளின் சிறப்புகள் மற்றும் நன்மைகளாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கின்றார்கள்.

அறியாமை காலத்தின் கவிஞர்களும் இருந்தனர். அவர்களின் கவிதைகளையும் அன்னார் (ரலி) ஆர்வமுடன் மனனம் செய்து வந்தார்கள். இறை வேதத்தை புரிந்து கொள்வதற்கு அவற்றுடன் ஆழமான தொடர்பு உள்ளது. அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உங்களது கவிதைகளை மனனம் செய்து கொள்ளுங்கள். கவனமற்றவர்களாக இருக்காதீர்கள். எங்களது கவிதைகள் எவை? என்று பார்வையாளர்கள் அன்னாரிடம் கேட்டனர். அப்போது அறியாமை காலத்தின் கவிதைகள் ஆகும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவற்றில் உங்களது வேதம் அதாவது திருக்குர்ஆனின் விரிவுரை உள்ளது. உங்களது கூற்றுகளின் பொருளாகும். அன்னாரின் இந்த கூற்றை அன்னாரின் சீடர்களும் திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பின் மொழிபெயர்ப்பாளர் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் அவர்களும் இந்த கூற்றை ஒப்புக் கொள்கின்றனர். நீங்கள் திருக்குர்ஆனை ஓதுங்கள். அதனை புரிய முடியவில்லையென்றால், பின்னர் அதன் பொருள்களை அரபு கோத்திரத்தின் கவிதைகளில் தேடுங்கள். ஏனென்றால் அந்த கவிதைகள் அரேபியர்களின் நீதிமன்றம் ஆகும்.

(முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப், ஷக்ஸிய்யத் அவ் கார்னாமே என்ற நூல் பக்கம் 336)

இந்திய துணைக் கண்டத்தின் பிரபலமான வாழ்க்கை வரலாற்றாசிரியர் அல்லாமா ஷிப்லி நுஃமானி அவர்கள் அல்ஃபாரூக் என்ற தனது நூலில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கவிதைகளில் இருந்த ஆர்வத்தை குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகின்றார்கள்: கவிதைகள் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பிரபல்யம் பொதுவாக குறைவாக உள்ளது. ஆயினும் அன்னார் (ரலி) அவர்கள் குறைவாகவே கவிதைகளை கூறி வந்தார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் கவிதைகளில் அன்னாருக்கு மிகச் சிறந்த ஆர்வம் இருந்தது. எந்த அளவுக்கென்றால் அதன் வரலாற்று வாழ்க்கையில் இந்த சம்பவத்தை நாம் புறக்கணித்து விட முடியாது. அன்னாருக்கு அரபு கோத்திரத்தில் ஒரு மிகப் பிரபலமான எல்லோராலும் அறியப்பட்ட கவிதைகளின் கவிதைகள் மிக அதிகமாக நினைவு இருந்தது. அனைத்து கவிஞர்களின் கவிதைகள் தொடர்பாகவும் அன்னாருக்கு சிறப்பான கருத்துகள் இருந்தன. அன்னார் (ரலி) அவர்களின் காலத்தில் அன்னாரை விட அதிகமாக கவிதைகளை கூறக் கூடியவர் வேறு எவரும் இருந்திருக்கவில்லை என்பதை அனைத்து இலக்கியவாதிகளும் பொதுவாக ஒப்புக் கொள்கின்றனர்.

அல்பயான் வத்தபயுன் என்ற தனது நூலில் ஜாஹில் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் தமது காலத்தில் எல்லாரையும் விட அதிகமாக கவிதையில் ஆர்வம் கொண்டவராக இருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இருந்த கவிதையின் மீதான ஆர்வத்தின் நிலை இவ்வாறு இருந்தது. நல்ல கவிதைகளை கேட்கும்போது பின்னர் மீண்டும் மீண்டும் மகிழ்ச்சியுற்று அதனை படிப்பார்கள். கிலாஃபத்தின் திட்டங்களின் காரணமாக அந்த மும்முரமான பணிகளிலிருந்து பங்கு பெறுவதற்கு அன்னாருக்கு சந்தர்ப்பம் கிடைக்க முடியவில்லை. இருந்தபோதிலும் இயல்பாகவே அன்னார் ஆர்வம் கொண்டவராக இருந்தார்கள். எனவே நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான கவிதைகள் மனனமாக நினைவில் இருந்தன.

இலக்கியவாதிகள் இவ்வாறு கூறுகின்றனர்: அன்னார் கவிதைகளை மனனம் செய்திருந்த நிலை எவ்வாறு இருந்தது? அதாவது ஒரு விவகாரத்தில் தீர்ப்பு வழங்கும்போது பின்னர் நிச்சயமாக ஏதாவதொரு கவிதையை கூறுவார்கள். அன்னார் (ரலி) அவர்கள் சுயமரியாதை, விடுதலை, கண்ணியம், வீரம் மற்றும் படிப்பினை வழங்கும் கருத்துக்களை உள்ளடக்கிய கவிதைகளை அன்னார் விரும்பி வந்தார்கள். இதன் அடிப்படையில் படைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அதிகாரிகளுக்கும் இவ்வாறு கட்டளை அனுப்பி இருந்தார்கள். அதாவது மக்களுக்கு கவிதைகளை மனனம் செய்வதற்கு வலியுறுத்த வேண்டும் என்று கட்டளை வழங்கி இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரி (ரலி) அவர்களுக்கு மக்களுக்கு கவிதைகளை மனனம் செய்வதற்கு கட்டளை வழங்குவீராக என்று கட்டளை அனுப்பினார்கள். ஏனென்றால் அந்த கவிதைகள் ஒழுக்கத்தின் உயர்வான விஷயத்தின் பக்கமும், சரியான கருத்தின் பக்கமும் வழிகாட்டுகின்றது.

அனைத்து மாவட்டங்களிலும் அனுப்பிய கட்டளைகளின் சொற்கள் இவ்வாறாக இருந்தன: தமது பிள்ளைகளுக்கு நீச்சல் கற்றுக் கொடுங்கள். குதிரை சவாரி செய்வதை கற்றுக் கொடுங்கள். உவமைகளைக் கொண்ட மற்றும் நல்ல கவிதைகளை மனனம் செய்ய வையுங்கள். அதாவது இலக்கிய ஆர்வத்தையும் உருவாக்குங்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கவிதைகளில் இருந்து வந்த ஏராளமான குறைகளை நீக்கி விட்டார்கள் என்பதும் இந்த சந்தர்ப்பத்தில் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். அந்த காலத்தில் கண்ணியமிக்க பெண்களின் பெயர்களை வெளிப்படையாக கவிதைகளில் கவிஞர்கள் குறிப்பிட்டு வந்தார்கள். மேலும் அவர்கள் மீதான தமது காதலையும் வெளிப்படுத்தி வந்தனர். இது அனைத்து அரபு கோத்திரங்களிலும் நடைமுறையாக இருந்து வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த சடங்கை அழித்து விட்டார்கள். மேலும் அதற்கு மிகக் கடுமையான தண்டனையை நியமித்தார்கள். இதேபோன்று வசைபாடும் கூற்றுக்களை பேசுவதை ஒரு குற்றமாக ஆக்கினார்கள். மேலும் மிகவும் பிரபலமாக இருந்து வந்த ஹுதைய்யா எனும் வசைபாடும் கவிதையை பாடி வந்த கவிஞரை இந்த குற்றத்தின் காரணமாக கைது செய்தார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 330 – 333, ஹிஜ்ரி 1431 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

அல்லாமா ஷிப்லி நுஃமானி மேலும் எழுதுகின்றார்கள்: அந்த காலத்தின் மாபெரும் கவிஞராக முதம்மிம் பின் நுவைரா இருந்தார். அவரது சகோதரரை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தவறுதலாக கொன்று விட்டார்கள். இந்த சம்பவம் அவருக்கு எந்த அளவிற்கு துன்பத்தை ஏற்படுத்தி இருந்ததென்றால் எப்போதும் அழுது வந்தார். மேலும் மர்ஸியா எனும் இரங்கல் கவிதைகளை கூறி வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானபோது அன்னார் (ரலி) அவர்கள் அவரிடம் மர்ஸியா எனும் இரங்கல் கவிதையை படிக்கும்படி கூறினார்கள். அப்போது அவர் சில வரிகளை படித்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்: எனக்கு இதுபோன்று மர்ஸியா வகை அதாவது இரங்கல் கவிதைகளை படிப்பதற்கு ஆற்றல் இருக்குமென்றால் நான் எனது சகோதரன் ஸைதிற்காக மர்ஸியா கவிதையை கூறி இருப்பேன். அப்போது அந்த நபர், அமீருல் மூமினீன் அவர்களே! எனது சகோதரர் தங்களின் சகோதரரைப் போன்று கொல்லப்பட்டிருந்தால் அதாவது ஷஹாதத்தின் மரணத்தை அடைந்திருந்தால் நான் ஒருபோதும் அதற்காக வருந்தியிருக்க மாட்டேன். முதம்மிம்மைப் போன்று வேறு எவரும் எனக்கு இரங்கல் தெரிவிக்கவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்போதும் கூறி வந்தார்கள்.

(அல்லாமா ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 345, ஹிஜ்ரி 1431 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சிறப்புகள் மற்றும் அந்தஸ்துகளைப் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சில சம்பவங்கள் மற்றும் முன்னறிவிப்புகள் ஒரேயொரு முறை மட்டுமே வெளிப்படுவதற்கு நம்பிக்கை வைக்க முடியும். சில முறை அது படிப்படியாக வெளிப்படலாம். அல்லது வேறு ஒருவர் மூலமாக வெளிப்படலாம். நமது நபி (ஸல்) அவர்களின் இந்த முன்னறிவிப்பை எடுத்துக் கொள்வோம். அதாவது கைஸர் மற்றும் கிஸ்ராவின் கருவூலங்களின் சாவிகள் அன்னார் (ஸல்) அவர்களின் கரங்களில் வைக்கப்படும் என்ற முன்னறிவிப்பாகும். ஆனால் முன்னறிவிப்பு வெளிப்படுவதற்கு முன்பாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இஸ்லாம் மற்றும் கைஸரின் கருவூலத்தையும் பார்க்கவில்லை. அதன் சாவிகளையும் பார்க்கவில்லை. அந்த சாவிகள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பது நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இருப்பு நிழல் வடிவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பாகவே இருந்தது. எனவே பொதுவான வஹீ ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கரம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கரமாகவே ஆக்கப்பட்டது.

(அய்யாமுஸ் சுலஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 265)

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் அக்பர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் ஃபாரூக் உமர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் துன்நூரைன் (ஹஸ்ரத் உஸ்மான்) (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலி முர்தஸா (ரலி) ஆகியோர் அனைவரும் உள்ளபடியே மார்க்கத்தின் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தார்கள் என்ற கொள்கை அவசியமாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தின் இரண்டாம் ஆதம் ஆவார்கள். மேலும் அதேபோன்று ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோர் மார்க்கத்தில் உண்மையான நம்பிக்கைக்குரியவர்களாக இல்லாமல் இருந்திருந்தால் இன்று திருக்குர்ஆனின் எந்தவொரு வசனத்தையும் அல்லாஹ்வின் புறமிருந்து இறங்கிய

வசனமாக கூறுவது நமக்கு கடினமாக இருந்திருக்கும்.

(மக்தூபாதே அஹ்மது தொகுதி 2 பக்கம் 151, கடிதம் எண் 2, ஹஸ்ரத் கான் சாஹிப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களுக்கு எழுதப்பட்டது ரப்வாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு எனது இறைவன் புறமிருந்து கிலாஃபத் தொடர்பாக ஆய்வின் மூலமாக போதனை வழங்கப்பட்டுள்ளது. வரலாற்று ஆராய்ச்சியாளர்களைப் போன்று நான் அதன் உண்மையின் அடி ஆழம் வரை சென்று விட்டேன். எனது இறைவன் எனக்கு இதனை வெளிப்படுத்தியுள்ளான். அதாவது சித்தீக், ஃபாரூக் மற்றும் உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோர் நல்லடியார்களாகவும், நம்பிக்கையாளர்களாவும் இருந்தனர். மேலும் அல்லாஹ் தேர்ந்தெடுத்த மக்களைச் சார்ந்தவர்களாக அவர்கள் இருந்தனர்.

அவர்கள் ரஹ்மான் எனும் இறைவனின் அருட்கொடையால் சிறப்பிக்கப்பட்டிருந்தனர். பெரும்பாலான சான்றோர்கள் அவர்களின் சிறப்புகளுக்கு சாட்சியம் வழங்கி வந்தனர். அந்த நபர்கள் கண்ணியமிக்க மற்றும் மேன்மை மிக்க இறைவனின் திருப்திக்காக நாட்டை துறந்தனர். எல்லா போர்களின் மையப் பகுதியிலும் நுழைந்தனர். கடும் வெப்பத்தின் மதிய வேளையின் சூட்டையும், குளிர்கால இரவின் குளிர்ச்சியையும் அவர்கள் பொருட்படுத்தவில்லை. மாறாக, புத்தம்புது இளைஞர்களைப் போன்று மார்க்க வழியில் தம்மை முற்றிலும் அர்ப்பணித்து விட்டார்கள். தம்மவர்கள் மற்றும் அந்நியர்களின் பக்கம் அவர்கள் ஈர்க்கப்படவில்லை. ரப்புல் ஆலமீன் அல்லாஹ்வுக்காக மட்டும் அனைத்திற்கும் விடை கொடுத்து விட்டார்கள். அவர்களின் செயல்களிலும், நடவடிக்கைகளிலும் நறுமணமும் மகிழ்ச்சியும் உள்ளது. இவை அனைத்தும அவர்களின் அந்தஸ்துகளின் தோட்டங்கள் மற்றும் அவர்களின் நன்மைகளின் தோட்டங்களின் பக்கம் நம்மை வழிநடத்துகின்றது. அவர்களின் ஒளிகள் தமது முழுமையான சிறப்புகளால் நம்மீது வெளிப்பட்டிருக்கின்றன. எனவே நீங்கள் அவர்களின் அந்தஸ்தின் ஒளியை அவர்களின் நறுமணத்தின் வாசனையைக் கொண்டு அறிந்து கொள்ளுங்கள். அவசரப்பட்டு தவறான எண்ணங்களை பின்பற்றாதீர்கள். சில அறிவிப்புகளை நம்பி விடாதீர்கள். ஏனென்றால் அவற்றில் ஏராளமான விஷமும், பெரும் அறிவீனமும் உள்ளது. மேலும் அவை நம்பத்தகுந்தவை அல்ல. அவற்றில் பெரும்பாலான அறிவிப்புகள் அழித்து விடக்கூடிய புயலுக்கும், மழைக்கான ஏமாற்றத்தை வழங்கக்கூடிய மின்னலுக்கும் ஒப்பானவை ஆகும். எனவே அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் அந்த அறிவிப்புகளை பின்பற்றக் கூடியவர்களாக ஆகி விடாதீர்கள்.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 25,26)

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் மூன்றாவதாக துன்நூரைன் போன்ற ஷேக்குகளை வழங்கியுள்ளான். இவர்களில் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் வாசல்களிலும், ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் படையின் முதல் பகுதியிலும் இருந்தார்கள். எனவே எந்த நபர் அன்னாரின் மகத்துவத்தை மறுக்கின்றாரோ அவர்களின் உறுதியான சான்றை ஏளனமாக கருதுகின்றாரோ மேலும் அவர்களுடன் மரியாதையாக நடந்து கொள்வதில்லையோ மாறாக, அவர்களை ஏளனம் செய்து அவர்களை ஏசிப் பேசுவதிலையே இருக்கின்றாரோ அப்படிப்பட்ட நபரின் தீய முடிவைக் குறித்தும், அவரின் ஈமான் வீணாகி விடுவது குறித்தும் நான் அஞ்சுகின்றேன். எவர்கள் இந்த துன்பத்தை கொடுத்தார்களோ மேலும் அவர்கள் மீது சாபமிட்டார்களோ மேலும் பழிகளை சுமத்தினார்களோ அவர்களின் உள்ளம் கடினமாக ஆகி விடும். மேலும் ரஹ்மான் இறைவனின் கோபம் அவர்களின் முடிவாக அமைந்து விடும்.

எனக்கு பல முறை இதில் அனுபவம் உள்ளது. நான் வெளிப்படையாகவே இதனை அறிவித்திருக்கின்றேன். அந்த நல்லடியார்களுடன் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் வைப்பது அருட்களை வெளிப்படுத்தக் கூடிய அல்லாஹ்வுடன் மிக அதிகமாக தொடர்பை முறித்துக் கொள்வதற்கு காரணியாகும். எவரெல்லாம் அவர்களுடன் பகைமை கொண்டாரோ அதுபோன்ற நபர்கள் கருணை மற்றும் அனைத்து வழிகளையும் அடைத்து விடுகின்றார். அவர்களுக்கு அறிவு மற்றும் ஞானத்தின் வாசல்கள் திறக்கப்படுவதில்லை. அல்லாஹ் அவர்களை உலகத்தின் இன்பங்களிலும், ஆபாசங்களிலும் விட்டு விடுகின்றான். மேலும் அவர்களை மன இச்சைகளின் குழிகளில் வீழ்த்தி விடுகின்றான். மேலும் அவர்களை தனது சந்நிதானத்திலிருந்து தொலைவில் இருக்கக் கூடியவர்களாகவும், இழப்பிற்குரியவர்களாகவும் ஆக்கி விடுகின்றான்.

அவர்களுக்கு அதாவது நேர்வழி பெற்ற கலீஃபாக்களுக்கு நபிமார்களுக்கு துன்பம் வழங்கப்பட்டதுபோன்றே துன்பம் வழங்கப்பட்டது. மேலும் அவர்கள் (மக்களால்) சபிக்கப்பட்டார்கள். தூதர்கள் மீது சபிக்கப்பட்டது போன்று அவர்கள் சபிக்கப்பட்டனர். இவ்வாறு அவர்கள் தூதர்களின் வாரிசாக இருப்பது நிரூபணமாகி விட்டது. ஏனென்றால் நம்பிக்கையாளர் மீது எந்த குற்றமுமின்றி சாபமிடப்பட்டால் மேலும் அவரை காஃபிர் என்று கூறினால் மேலும் காரணமின்றி ஏளனம் செய்யப்பட்டு அவரை ஏசிப்பேசினால் அவர்கள் நபிமார்களுக்கு ஒப்பானவராக ஆகி விடுகின்றார். மேலும் அல்லாஹ்வின் தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களைப் போன்று ஆகி விடுகின்றார். பின்னர் அவருக்கு அதற்கான நற்கூலி வழங்கப்படுகின்றது. அதாவது நபிமார்களுக்கு நற்கூலி வழங்கப்படுவது போன்று அவர்களுக்கு நற்கூலி வழங்கப்படுகிறது. அவர்கள் தூதர்களைப் போன்று நற்கூலி பெறுகின்றனர். இந்த மக்கள் நிச்சயமாக கைருல் அன்பியா ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் மகத்துவமிக்க அந்தஸ்தில் நிலைபெற்றுள்ளனர். கண்ணியம் மற்றும் மேன்மைமிக்க அல்லாஹ்வும் அவர்களை புகழ்ந்துள்ளான். அவர்கள் ஓர் உயர்தரமான சமுதாயமாக இருந்தார்கள். அந்த இறைவன் அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட அடியார்களுக்கும் உதவி செய்வது போன்று தனது ஆன்மாவால் அவர்களுக்கும் உதவி செய்கின்றான்.

உண்மையில் அவர்களின் உண்மையின் ஒளியும், அவர்களின் தூய்மையின் தாக்கமும் முழுமையான பொலிவுடன் வெளிப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் உண்மையாளர்களாக இருந்தார்கள். மேலும் அல்லாஹ் அவர்கள் மீதும், அவர்கள் அல்லாஹ்வின் மீதும் திருப்தி கொண்டிருந்தனர் என்பதும், அல்லாஹ் இவ்வுலகில் வேறு எவருக்கும் வழங்காதவற்றை அவர்களுக்கு வழங்கினான் என்பதும் மிகத் தெளிவாக புலப்பட்டு விட்டது.

(சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 28 – 30)

பின்னர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஷியா சகோதரர்களின் இந்த விஷயத்தை ரத்து செய்தவாறு கூறுகின்றார்கள்: அபூபக்ர் சித்துக் (ரலி) அல்லது உமர் ஃபாரூக் (ரலி) அவர்கள், அலி முர்தஸா (ரலி) மற்றும் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) ஆகியோரின் உரிமைகளை பறித்து அவர்கள் மீது அநீதி இழைத்ததாக எந்த நபர் கருதுகின்றாரோ அந்த நபர் நீதியை கைவிட்டு விட்டார். மேலும் அநீதி மீது அன்பு கொண்டுள்ளார். மேலும் அநீதியாளர்களின் வழியை மேற்கொண்டு விட்டார். நிச்சயமாக அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்காக தனது தேசத்தையும், அன்பிற்குரிய நண்பர்களையும், செல்வத்தையும் எந்த மக்கள் விட்டு விட்டார்களோ அவர்களுக்கு நிராகரிப்பவர்கள் புறமிருந்து துன்பங்கள் கொடுக்கப்பட்டன. தீங்கை விரும்பக்கூடிய நபர்களின் கரங்களால் அவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் மிகவும் சிறந்த மற்றும் நல்லடியார்களைப் போன்ற பொறுமையை மேற்கொண்டார்கள். அவர்கள் கலீஃபாவாக ஆக்கப்பட்டார்கள். ஆயினும் அவர்கள் வீடுகளை பொன் பொருட்களால் நிறைக்கவில்லை. மேலும் தமது புதல்வர்களையும், புதல்விகளையும் தங்கம் மற்றும் வெள்ளிகளுக்கு வாரிசாக ஆக்கவில்லை. மாறாக, அவர்கள் பெற்ற அனைத்தையும் பைத்துல் மாலுக்கு கொடுத்து விட்டார்கள்.

மேலும் அவர்கள் உலகவாதிகளைப் போன்றும், வழிகேடர்களைப் போன்றும் தங்களது பிள்ளைகளை கலீஃபாவாக ஆக்கவில்லை. அவர்கள் இவ்வுலகில் ஃபகீர்களாகவும், ஏழ்மையிலும், வறுமையிலும் வாழ்க்கையை கழித்தார்கள். மேலும் அவர்கள் செல்வந்தர்களைப் போன்றும், பெரும் தலைவர்களைப் போன்றும் பெருமைக்குரிய ஆடம்பர விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தவில்லை. அவ்வாறிருக்க அவர்கள் பலவந்தமாக மக்களின் செல்வங்களை பறிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் வழிப்பறி செய்யக் கூடியவர்களாகவும், கொள்ளையடிப்பதன் பக்கம் ஆர்வம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள் என்று அவர்களைக் குறித்து எண்ணம் கொள்ள முடியுமா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையின் தூய தாக்கம் இதுவாகவா இருந்தது?

உண்மை என்னவென்றால் அகில உலகங்களுக்கும் இறைவனான அல்லாஹ் அவர்களைப் புகழ்ந்து பாராட்டியுள்ளான். உண்மை என்னவென்றால் அல்லாஹ் அவர்களின் ஆன்மாக்களை தூய்மைப்படுத்தியுள்ளான். அவர்களின் உள்ளங்களுக்கு தூய்மையை வழங்கினான். அவர்களின் இருப்பை ஒளிமயமாக்கினான். மேலும் எதிர்காலத்தில் வரக்கூடிய தூய்மையாளர்களுக்கு முன்மாதிரியாக ஆக்கினான். நாம் அவர்களைக் குறித்து பலவீனமான எண்ணங்களையும், தாழ்வான எண்ணங்களையும் ஒருபோதும் கொள்வதில்லை. அந்த தூயவர்களின் எண்ணங்களின் மீது தவறான செய்தியை கொடுக்கும் எந்த எண்ணமும் நம்மிடம் இல்லை. அல்லது அவர்களைக் குறித்து சிறிய தீமையை சுட்டிக் காட்டும் எண்ணம் கூட எம்மிடம் இல்லை. அல்லது அநீதியின் பக்கம் சுட்டிக் காட்டும் எந்த எண்ணமும் எம்மிடம் இல்லை.

இறைவன் மீது ஆணையாக! அவர்கள் நீதியை நிலைநாட்டக்கூடிய மக்களாக இருந்தனர். அவர்களுக்கு தடுக்கப்பட்ட செல்வங்களின் ஒரு பெரும் பள்ளத்தாக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அதனை அவர்கள் சற்றும் பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள். மேலும் அந்த செல்வங்கள் மலைகளைப் போன்ற தங்கமாகவோ அல்லது ஏழு பூமிகள் அளவு கொண்ட செல்வங்களாக இருந்திருந்தாலும் சரியே அவர்கள் பேராசை பிடித்தவர்களைப் போன்று அதன் பக்கம் கவனம் செலுத்தியிருக்க மாட்டார்கள். ஒருவேளை

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 6-13 January 2022 Issue No. 1-2

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அவர்களுக்கு ஆகுமான செல்வம் கிடைத்திருந்தால் பின்னர் நிச்சயமாக அவர்கள் அதனை கம்பீரமிக்க இறைவனின் வழியிலும், மார்க்கத்தின் திட்டங்களுக்காகவும் செலவு செய்திருப்பார்கள். எனவே அத்தகைய மக்கள் ஃபாத்திமத்துஸ் ஸுஹ்ரா (ரலி) அவர்களை வெறுப்படையச் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இதயமாக இருந்தவருக்கு தீயவர்களைப் போன்று துன்பம் கொடுத்தார்கள் என்று அந்த கண்ணியமிக்கவர்களைக் குறித்து நாம் எப்படி எண்ணம் கொள்ள முடியும்? இன்னும் கூறப்போனால், கண்ணியமிக்கவர்கள் நல்லெண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். மேலும் உண்மையில் உறுதிப்பாட்டுடன் நிலை நிற்பார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து அவர்கள் மீது கருணைகள் இறங்குகின்றன. அல்லாஹ் இறையச்சமுடையோரின் அக நிலையை நன்கு அறிகின்றான். (சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 37 – 39)

அடுத்து அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மை என்னவென்றால், அபூபக்ர் சித்தீக் (ரலி) மற்றும் உமர் ஃபாரூக் (ரலி) ஆகிய இருவரும் பெரும் சஹாபிகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் இருவரும் உரிமைகளை வழங்குவதில் எந்த கவனக்குறைவையும் வெளிப்படுத்தவில்லை. அவர்கள் இறையச்சத்தை தனது வழியாகவும், நீதியை தமது நோக்கமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அவர்கள் நிலைமைகளை ஆழமாக ஆய்வு செய்தார்கள். இரகசியங்களின் அடி ஆளம் வரை சென்றடைந்தார்கள். உலக ஆசைகளை பெறுவது ஒருபோதும் அவர்களின் நோக்கமாக இருந்ததில்லை. அவர்கள் அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதில் தமது நஃப்ஸ்களை ஈடுபடுத்தி இருந்தார்கள். பெரும்பாலான நன்மைகள் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு ஆதரவாக இந்த இரு சான்றோர்களை தவிர அதாவது அபூபக்ர் மற்றும் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) ஆகியோரைத் தவிர வேறு எவரையும் கண்டதில்லை. இவர்கள் இருவரும் ஒளிமயமான சூரியனாக திகழ்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகச் சிறந்த முறையில் பின்பற்றக் கூடியவர்களாக இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் நேசத்தில் தங்களை மாய்த்துக் கொண்டிருந்தார்கள். உண்மையை அடைவதற்காக எல்லா துன்பங்களையும் இன்பமாக கருதினார்கள். தன்னிகரற்ற அந்த நபிக்காக எல்லா இழிவையும் சகித்துக் கொண்டார்கள். நிராகரிப்பாளர்கள் மற்றும் மறுப்பவர்களின் படைகளுக்கு எதிராகவும், நிராகரிப்பவர்களுடனான போரின் நிலைமையிலும் சிங்கத்தைப் போன்று முன்னால் வந்தார்கள். எந்த அளவுக்கென்றால் இஸ்லாம் வெற்றி பெற்று விட்டது. எதிரிகளின் படைகள் தோல்வியை சந்தித்தன. ஷிர்க் ஒழிந்தது. அதற்கு முற்றிலும் முடிவு கட்டப்பட்டது. மார்க்கத்தின் சூரியன் ஒளி வீசத் தொடங்கியது. ஒப்புக் கொள்ளப்பட்ட மார்க்கத் தொண்டுகளை ஆற்றியவாறும், முஸ்லிம்களை நன்மை மற்றும் இன்பத்தில் நிலைநாட்டியவாறும் அந்த இரு சான்றோர்களின் முடிவும் கைருல் முர்ஸலீன் அவர்களுக்கு அருகாமையில் நிகழ்ந்தது.

இது அந்த அல்லாஹ்வின் அருளாகும். அந்த இறைவனின் பார்வையிலிருந்து இறையச்சமுடையவர் மறைவாக இருக்க முடியாது. நிச்சயமாக அருள் அல்லாஹ்வின் கைகளில் உள்ளது. அவன் அதனை தான் நாடியவர்களுக்கு வழங்குகின்றான். எந்த நபர் முழுமையான ஆர்வத்துடன் அல்லாஹ்வின் மடியில் வந்து விடுகின்றாரோ அவன் அவரை ஒருபோதும் வீணாக்குவதில்லை. உலகம் முழுவதும் உள்ள ஒவ்வொரு பொருளும் அவருக்கு எதிரியாக ஆகி விட்டாலும் சரியே. அல்லாஹ்வை தேடக் கூடியவர் எந்தவொரு பாதிப்பு மற்றும் கஷ்டத்தை பார்க்க மாட்டார். அல்லாஹ் உண்மையாளர்களை ஆதரவற்றவர்களாகவும், உதவியற்றவர்களாகவும் விட்டு விடுவதில்லை.

அல்லாஹு அக்பர்! அபூபக்ர் மற்றும் உமர் (ரலி) ஆகிய இருவரின் உண்மை மற்றும் தூய்மை எவ்வளவு உயர் அந்தஸ்து கொண்டதாக உள்ளது! அவர்கள் இருவரும் எப்படிப்பட்ட அருளுக்குரிய அடக்கஸ்தலத்தில் அடக்கம் செய்யப்படுள்ளார்கள் என்றால் ஒருவேளை மூஸாவும், ஈஸாவும் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயமாக அங்கு அடக்கம் செய்யப்படுவதற்கு நிச்சயமாக ஏக்கம் கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த இடம் வெறும் ஆசையால் மட்டும் கிடைத்து விடாது. மேலும் வெறும் விருப்பத்தால் மட்டும் வழங்கப்பட மாட்டாது. மாறாக, கண்ணியமிக்க இறைவனின் அவையிலிருந்து வழங்கப்படும் ஒரு நிரந்தரமான கருணையாகும். இறைவனின் கருணை எந்த மக்கள் மீது ஆரம்பம் முதலே கவனம் கொண்டுள்ளதோ அவர்களுக்கே இது கிடைக்க முடியும். மேலும் இந்த மக்களை இறுதியில் அல்லாஹ்வின் அருளின் போர்வைகள் போர்த்திக் கொள்ளும். (சிர்ருல் கிலாஃபா உருது மொழியாக்கம் பக்கம் 77–79)

பின்னர் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு இந்த மூன்று சஹாபிகளின் மூலமாகவே இஸ்லாம் சிறப்புகளைப் பெற்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் செய்த காரியங்களில் எந்த குறைவும் இருக்கவில்லை. ஆயினும் சித்தீக் அக்பர் (ரலி) அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து ஒருபோதும் அது சிறப்பாக இருக்க முடியாது. ஏனென்றால் வெற்றியின் படிக்கட்டுகளை ஹஸ்ரத் சித்தீக் அக்பர் (ரலி) அவர்களே உருவாக்கி இருந்தார்கள். மாபெரும் குழப்பத்தை அன்னாரே அகற்றி இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களுக்கு எப்படிப்பட்ட கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிட்டதோ அதுபோன்ற காலத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒருபோதும் எதிர்கொள்ளவில்லை. எனவே சித்தீக் (ரலி) அவர்கள் வழியை சுத்தப்படுத்தினார்கள். பின்னர் அந்த வழியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெற்றிகளின் வாசல்களை திறந்தார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6 பக்கம் 414, 415)

அடுத்து ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் (ரலி) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உள்ளத்தின் நிலைமையைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்கள்: அதாவது அன்னார் (அலை) அவர்களின் உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோர் மீது இருந்த அன்பு மற்றும் நேசத்தின் நிலைமையை எழுதுகின்றார்கள்.

ஒரு முறை ஒரு நண்பர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மீதான அன்பில் தம்மை முழுவதும் மாய்த்துக் கொண்டிருந்தார். அவர் இவ்வாறு கூறினார்: நாம் ஏன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அந்தஸ்துகளில் சான்றோர்களை விட அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரை விட உயர்வானவராக கருதக்கூடாது? மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் நெருக்கமானவராக தங்களை ஏன் கருதக்கூடாது? என்று கேட்டார். அல்லாஹ்! அல்லாஹ்!! இந்த விஷயத்தை கேட்டவுடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் முகம் மாறியது. தலை முதல் பாதம் வரை அன்னாரிடம் விநோதமான வேதனையும், நிம்மதியின்மையும் உருவாகி விட்டது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் தூய்மைமிக்க இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். அந்த நேரம் ஹுஸூர் (அலை) அவர்கள் மீதான எனது ஈமான் இன்னும் அதிகமாகி விட்டது. அன்னார் (அலை) அவர்கள் தொடர்ந்து 6 மணி நேரம் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அன்னார் பேசத் தொடங்கியபோது நான் கடிகாரத்தை பார்த்தேன். அன்னார் (அலை) அவர்கள் சொற்பொழிவை முடித்த பிறகும் நான் கடிகாரத்தை பார்த்தேன். முழுமையாக 6 மணி நேரம் ஆகி இருந்தது. ஒரு நிமிடம் கூட வித்தியாசம் இல்லாமல் இருந்தது. இவ்வளவு நேரம் வரை ஒரு கருத்தை எடுத்துரைப்பதும், தொடர்ந்து எடுத்துரைப்பதும் ஓர் அசாதாரண நிலையாகும். அந்த முழு கட்டுரையிலும் அன்னார் (அலை) அவர்கள் ஸலவாத்துகளின் சிறப்புகளையும், அருட்களையும், தமது பணிவான நிலை குறித்தும் எடுத்துரைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரின் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்கள்.

மேலும் கூறினார்கள்: நான் அந்த மக்களை புகழ்ந்து கொண்டிருப்பதும், அவர்களின் காலடி மண்ணாக இருப்பதும் எனக்கு போதுமான பெருமையாகும். அவர்களுக்கு கிடைத்திருக்கின்ற சில பகுதி சிறப்புகள் அல்லாஹ் கியாமத் வரை வேறு எந்த நபரும் அதனைப் பெற முடியாது. ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மீண்டும் எப்போது பூமியில் பிறப்பார்கள்? கண்ணியத்திற்குரிய இரு சான்றோர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தொண்டாற்றுவதற்கு கிடைத்த சந்தர்ப்பம் மற்றவர்களுக்கு கிடைப்பதற்கு!

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 326)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பு இங்கு நிறைவு பெறுகின்றது. அதாவது குத்பாக்களில் முற்று பெறுகின்றது. எதிர்வரும் காலத்தில் நற்பேறு வழங்கினால் பின்னர் நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நற்குறிப்பை தொடங்குவேன். இன்ஷா அல்லாஹ்

(தமிழாக்கம்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் ராஹிர்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad